
# கனவின் விலை ப



ராஜேஷ்குமார்

**1**

**ப**ங்களா பூராவும் ஒரு தேவையான பரபரப்பில் இருந்தது.

ஐம்பது வயது பாகீரதி தன்னுடைய ப்ளாட் பிரஷரையும், மூச்சிரைப்பையும், 'அட சும்மா கெட!' என்று மிரட்டி வைத்து விட்டு மாடிப்படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தாள். விரல் தேய டெலிபோன் டயலைச் சுழற்றி யார் யாருக்கோ போன் செய்து, "ஆமா... இன்னிக்குத்தான் கங்காதரன் வர்றான்... லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து வர்றான். ட்ரெயினிங்கை முடிச்சுட்டான்..." என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். நெற்றியில் துளிர்த்த வியர்வையைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

"அம்மா...!"

போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு ரோஜா மாலைகளைச் சுமந்துகொண்டு மோகன கிருஷ்ணன் உள்ளே வந்து கொண்டிருந்தான். முகம் பூராவும் சிரிப்பு ஒட்டியிருந்தது.

"டேய் மோகன்...! எத்தனை மாலை வாங்கிட்டு வந்தே...?" - பாகீரதி ஆர்வமாய்க் கேட்டுக் கொண்டே அவனை நெருங்கினாள். ரோஜா மாலைகளைத் தடவினாள்.

"நாலு மாலை! போதுமில்லையாம்மா...?"

"போதும்... ஆனா மாலை சின்னதாயிருக்கேடா... பணம் போனாப் போகுதுன்னு கொஞ்சம் பெரிசாவே வாங்கிட்டு வந்திருக்கலாமே... உன்னோட அண்ணன் கங்காதரன் ஆறு மாசமா லாஸ் ஏஞ்சல்ஸில தங்கி வியாபார சம்பந்தமாப் படிச்சிட்டு வர்றான்... அவனோட உடம்பையே மறைக்கிற மாதிரி மாலை போட வேண்டாமா? உன்னோட கஞ்சத்தனத்தை இதிலேயுமா காட்டணும்..."

"அம்மா... அம்மா... இப்படியெல்லாம் நீ சொல்லுவேன்னு எனக்குத் தெரியும். அந்தப் பேச்சை உன்கிட்டயிருந்து வாங்கக் கூடாதுன்னு தான் பெரிய மாலை வாங்கறதுக்காகப் பூ



மார்க்கெட் பூராவும் சுத்தினேன். இன்னிக்கு முகூர்த்த நாளாம். மாலைக்கு ஏக டிமாண்ட்... இதைவிடப் பெரிய மாலையே கிடைக்கலை... இந்த மாலைக்கே அநியாய விலை குடுத்துத்தான் வாங்கிட்டு வந்தேன்..."

"பாகீரதி! உன்னோட சின்ன மகன் மோகன கிருஷ்ணனுக்குக் கிடைக்காத அந்தப் பெரிய மாலையை நான் வாங்கிட்டு வந்திருக்கேன்... பார்..."

குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

பாகீரதியின் அண்ணன் சுந்தரமூர்த்தி பெரிய நரை மீசைக்குக் கீழே தெரிகிற சிரிப்போடு வந்து கொண்டிருந்தார். அங்கவஸ்திரம் கழுத்தைச் சுற்றி முடியாமல் தோளில் புரண்டிருந்தது. சில்க் ஜிப்பாமே பிளவர் செண்ட்டில் நனைந்து காற்றை நிறைத்தது.

"வாண்ணா..." - பாகீரதி மலர்ந்து போய், அண்ணனை நோக்கி வந்தாள். சுந்தரமூர்த்திக்குப் பின்னால் இரண்டு ஆட்கள் மல்லிகையும் வில்வியும் கலந்த அந்தப் பெரிய மாலையைத் தூக்கி வந்தார்கள். அறையின் சுவருக்குச் சாய்த்து நிறுத்தினார்கள்.

"அ...டே...ங்...கப்பா... எத்தினி பெரிய மாலை!"

"பாகீரதி! கங்காதரனோட கழுத்தை ஒடிக்கப் போகுது இந்த மாலை. ஆமா... ஃப்ளைட் எத்தனை மணிக்காம்? ஏர்போர்ட்டுக்கு போன் பண்ணிக் கேட்டீங்களா...?" - சுந்தரமூர்த்தி கேட்க, பாகீரதி, மோகன கிருஷ்ணன் பக்கமாய்த் திரும்பினாள்.

"மோகன்!"

"என்னம்மா?"

"சூலூர் ஏர்போர்ட்டுக்கு போன் பண்ணி 'போயிங்' சரியான நேரத்துக்கு வருதான்னு கேளு...! நீ வாண்ணா... அப்படி உட்கார்ந்து பேசலாம்..."

மோகன கிருஷ்ணன் டெலிபோனை நோக்கி நடக்க - சுந்தரமூர்த்தியும் பாகீரதியும் சோபாவில் உட்கார்ந்தார்கள்.

''பாகீரதி...!''

''என்னண்ணா...''

''சுமதிக்குப் போன பத்தாம் தேதியே இருபத்தி ரண்டு வயசு முடிஞ்சுடுச்சு... கங்காதரனும் ட்ரெயினிங்கை முடிச்சுட்டு வந்துட்டான். இனிமேலும் கல்யாணத்தைத் தள்ளிப் போடறதுல அர்த்தமே இல்லை... அடுத்த மாசத்துல ஒரு நல்ல முகூர்த்தம் இருக்கு... முடிச்சுடலாமா? நீ என்ன சொல்றே?''

''அண்ணா... நீ ரொம்பவும் அவசரப்படறே... கங்காதரன்கிட்டே ஒருதடவை சுமதியைப் பத்திப் பேசிப் பார்த்தேன். ட்ரெயினிங்கை முடிச்சுட்டு வந்த பின்னாடி அதைப் பத்தி யோசிப்போம்னு சொல்லிட்டான்.''

சுந்தரமூர்த்தி மீசையை ஒதுக்கிக் கொண்டு சிரித்தார்.

''யோசிப்போம்னுதானே சொன்னான்... வேண்டாம்னு சொல்லிடலையே... பாகீரதி! இந்தத் தடவை கண்டிப்பா ஒத்துக்குவான். கங்காதரன் வரட்டும்... பேசி முடிவு பண்ணிடலாம்.''

''அண்ணா...! நான் சொன்ன பேச்சை கங்காதரன் என்னிக்குமே தட்டினதேயில்லை... சுமதியைத்தான் அவனுக்குக்*கட்டி வைக்கப் போறோம்னு அவனுக்கும் நல்லாவே தெரியும்... இன்னிக்கு எப்படியும் வந்துடப் போறான்... வந்த உடனே கல்யாணத்தைப் பத்தி எதும் பேச வேண்டாம்... ரெண்டு நாள் கழிச்சு நானே பேச்சு ஆரம்பிக்கறேன்... எப்படியாவது பேசி அவனோட சம்மதத்தை வாங்கிடறேன்...''

''அம்மா...!''

கூப்பிட்டுக் கொண்டே மோகனகிருஷ்ணன் திரும்பி வந்தான்.

''என்ன மோகன்... போயிங்... கரெக்ட் டயமா...?''

''ரெண்டு மணி நேரம் லேட்டாம். பத்தரைக்குத்தான் ஃபிளைட்டாம்.''

சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள் பாகீரதி. உஸ் என்று பெருமூச்சு விட்டாள்.



''இப்பத்தான் மணி எட்டரை. இன்னும் ரெண்டு மணி நேரம் வெயிட் பண்ணனும். மோகன், நாம எத்தனை மணிக்கு ஏரோட்ரோம் போறோம்?''

''இங்கிருந்து ஒன்பதரைக்குப் புறப்பட்டா போதும்மா.''

''ரெண்டு கார்லயும் எதும் கோளாறு இல்லையே...?''

''இல்லேம்மா...''

''நல்லாப் பார்த்துக்க... புறப்படற நேரத்துல காரோட பானட்டைத் திறந்து வெச்சுக்கிட்டு டிரைவர் நோண்டிகிட்டு இருக்கப் போறான்...''

''இல்லேம்மா... கார் ரெண்டும் நல்ல கண்டிஷனில்தான் இருக்கு...''

பாகீரதி எழுந்தாள். ''சரி... மாமாவைக் கூட்டிக்கிட்டு டைனிங் டேபிளுக்குப் போ... அவரைச் சாப்பிடச் சொல்லு. நான் மத்தியான விருந்துக்கான அயிட்டங்களை சமையற்காரர் கிட்டே சொல்லிட்டு வந்துடறேன்.''

சமையற்கட்டை நோக்கிப் போனாள் பாகீரதி.

''வாங்க... மாமா... சாப்பிடப் போகலாம்...''

சுந்தர மூர்த்தியைக் கூப்பிட்டான் மோகன கிருஷ்ணன். சுந்தரமூர்த்தி எழுந்தார்.

''ஏன்டா மோகன்... பிசினஸெல்லாம் எப்படியிருக்கு...?''

''அமோகமா இருக்கு மாமா...''

''எஸ்டேட்ல டீ பிளான்டேஷன் எப்படி? பரவாயில்லையா...?''

''வாரிக் கொட்டுது மாமா...''

''கங்காதரன் வந்ததும் புதுசா ரெண்டு இண்டஸ்ட்ரி தொடங்கப் போறானாமே! உண்மையா...?''

''ஆமா... மாமா... அண்ணன் அப்படித்தான் சொல்லிட்டுப் போச்சு...''

டைனிங் டேபிளுக்கு முன்னே உட்கார்ந்தார் சுந்தர மூர்த்தி. ''நீ எப்போ கங்காதரன் மாதிரி ஃபாரின் எல்லாம் போகப் போறே? உனக்கு அந்த ஆசையெல்லாம் இல்லையா...?''

''இருக்கு மாமா... இனிமேதான்

போகனும்...''

''உன்னோட அம்மா இருக்காளே, அவ சின்ன வயசாயிருந்த போதே கான்ட்ரொவர்ஷியல் டைப். மத்தவங்க விரும்பறதை அவ விரும்ப மாட்டா... அவ விரும்பறதை மத்தவங்க எத்துக்கத் தயங்குவாங்க... உதாரணத்துக்கு இந்த ஒண்ணையே சொல்லலாமே... கங்காதரன் பாகீரதிக்கு மூத்த தாரத்து மகன்... நீ அவளோட வயத்துல பிறந்தவன். ஆனா அவள் தன்னோட பாசத்தை பூராவுமே கங்காதரன் மேலே கொட்டறா. அவனைப் பத்தியே எப்பவும் பேசறா... நீ ஒருத்தன் இருக்கிறதையே அவ மறந்துடறா... ஊர் உலகத்துல மூத்தாளோட குழந்தையை இளையவளா வந்தவ வெறுப்பா... ஆனா பாகீரதி நேர்மாறா நடத்துக்கிறா...''

மோகன கிருஷ்ணன் சிரித்தான்.

''அம்மா அப்படி நடக்கிறதுல எனக்கும் சந்தோஷம் தான் மாமா...!''

''என்ன சந்தோஷம் போ... வர வர நீ ஒரு கொத்தடிமை மாதிரி ஆயிட்டே... சரி... சரி... டிபனைக் கொண்டாரச் சொல்லு... பசி வயித்தைக் கிண்டுது...''

மோகன கிருஷ்ணன் உள்பக்கமாய்த் திரும்பி குரல் கொடுத்தான்.

''பொன்னம்மா... டேபிளுக்கு டிபனைக் கொண்டா... சூடா இருக்கட்டும்...''

பொன்னம்மா எவர்சில்வர் தட்டுகளை வைத்து டிபனைப் பரிமாற - மோகன கிருஷ்ணன் மெல்லிய குரலில் சுந்தரமூர்த்தியிடம் கேட்டான்.

''ஏன் மாமா... சுமதியும் கங்காதரனை ரிசிவ் பண்ண ஏர்போர்ட் வருவா இல்லையா?''

''வர்ரேன்னுதான் சொன்னா...''

''அவளையும் கூடவே கூட்டிகிட்டு வந்திருக்கலாம் மாமா...!''

இட்லியை சட்னியில் தோய்த்து வாயில் திணித்துக் கொண்ட சுந்தரமூர்த்தி சொன்னார்.

''அவளோட ஃப்ரெண்ட் ஒருத்திக்கு இன்னிக்குக் கல்யாணமாம். முகூர்த்தத்தை முடிச்சிக்கிட்டு நேரே ஏர்போர்ட் வந்துடறதா சொன்னா... அதெல்லாம் சொன்னபடி வந்துடுவா... அந்த சாம்பார் பக்கெட்டை இப்படி நகர்த்துடா மோகன்...''



மோகனகிருஷ்ணன் சாம்பார் பக்கெட்டை நகர்த்திய அதே விநாடி-

ஹாலில் இருந்த டெலிபோன் வீறிட்டது.

''நீங்க சாப்பிடுங்க மாமா... போனை அட்டெண்ட் பண்ணிட்டு வந்துடறேன்...''

''ஹலோ!''

''................''

''சுமதி... நீயா? என்ன விஷயம்? உன்னோட குரல் ஏன் இப்படி நடுங்குது?''

''................''

அடுத்த விநாடி அதிர்ந்தான் மோகன கிருஷ்ணன். எச்சிலை - அமிலத்தை விழுங்குகிற அவஸ்தையோடு விழுங்கி விட்டுக் கேட்டான்.

''சுமதி... நீ என்ன சொல்றே?''

''................''

''சரியான ந்யூஸ்தானா? நல்லா விசாரிச்சியா?''

''................''

''சரி... அங்கேயே இரு... வந்துடறேன்''.

ரிஸிவரைத் தட்டென்று வைத்துவிட்டு, வியர்த்துப்போன முகத்தைக் கையாலேயே துடைத்துக் கொண்டு அப்படியே சரிந்து போய் உட்கார்ந்தான் மோகன கிருஷ்ணன்.

சமையற் கட்டிலிருந்து வெளிப்பட்ட பாகீரதி, மோகன கிருஷ்ணன் தளர்ந்துபோய் உட்காருவதைப் பார்த்துவிட்டு அவசர நடையில் வந்தாள்.

''மோகன்... ஏண்டா இப்படி உட்கார்ந்துட்டே? போன்ல யாரு?''

''அ...ம்...மா...''

''என்னடா...?''

''அம்...மா...!''

''என்...ன...டா?'' - பாகீரதி பயமாய் அவனுடைய தோளைப் பற்றினாள். மோகன கிருஷ்ணன் கண்களில் படிந்துவிட்ட நீர்த்திரையோடு எங்கோ பார்த்துக்கொண்டே சொன்னான்.

''அம்...மா... அண்ணன் கங்காதரன் வந்த

போயிங்... தீப்பிடிச்சு கடல்ல விழுந்து... ஒருத்தர்கூட உயிர் பிழைக்கலையாம்... ஏர்போர்ட்டிலிருந்து சுமதி பேசினா...''

பாகீரதி விழிகள் நிலைக்க...

அப்படியே உறைந்து போனாள்.

## 2

ஆஹார் ஏர்போர்ட்டில் அந்தக் கவலையான கும்பல் கூடியிருந்தது.

அநேகமாய் எல்லாரும் அழுது கொண்டிருந்தார்கள். அசோக சின்னத்தைத் தோள் பட்டையில் குத்திக் கொண்ட ஆபீசர்கள் வேகமான ஆங்கிலத்தில் பேசிக் கவலைப்பட்டார்கள். வயர்லெஸ்ஸில் ஏர்போர்ட் சுபீரியர்களிடம் வருத்தமாய்ப் பேசினார்கள். கண்ணீரோடு கேள்வி கேட்ட பெண்களுக்குப் பதில் சொல்லாமல் தலை குனிந்தார்கள்.

''யாராவது பிழைச்சிருக்காங்களா...?''

''சான்ஸஸ் ரொம்பவும் கம்மி...''

''ஏறக்குறைய பத்தாயிரம் அடி உயரத்தில் தீப்பிடிச்ச விமானம் கடல்ல வந்து விழறப்போ கரிக்கட்டையாத்தான் வந்து விழுந்தது...: நடு ஆகாயத்திலேயே பயணப்பட்ட அத்தனை பேரும் எரிஞ்சு போயிருக்கலாம்.''

கௌண்ட்டருக்குப் பின்னால் உட்கார்ந்து, ஒரு வெள்ளுடுப்பு அதிகாரி, எதிரே தெரிந்த முகங்களுக்கு விபரம் சொல்லிக் கொண்டிருந்தார். கையில் ட்ரிப் ஷீட்டின் பிரதியை வைத்து கேட்பவர்களுக்குப் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஜெ. ராமகிருஷ்ணன் ஃப்ரம் பாம்பே...'' - யாரோ ஒருத்தர் கவலையாய்க் கேட்க...

''எஸ்...ஹி... ஈஸ்... ஹியர்... ஸாரிடு லேஸ் திஸ்...''

''எச். பி. பட்டேல்...''

''லிஸ்ட்டில் பெயர் இருக்கிறது. மன்னியுங்கள்.''

மோகன கிருஷ்ணன் கும்பலை ஊடுருவி முன்னால் வந்து பிசிறு தட்டுகிற குரலில்



கேட்டான்.

''எஸ். கங்காதரன் ஃப்ரம் பாம்பே...''

வெள்ளுடுப்பு அதிகாரி ட்ரிப் ஷீட்டின் டைப் அடித்த பெயர்களின் மீது விரலை நகர்த்தினார். கடைசிக்கு முந்தின பெயர் வந்ததும் விரலை நிறுத்தினார். சொன்னார்.

''பயணம் செய்திருக்கிறார்.''

மோகன கிருஷ்ணன் நொறுங்கிப் போனவனாய் கும்பலினின்றும் வெளிப்பட்டான். லௌஞ்சில் அழுகையோடு உட்கார்ந்திருந்த பாகீரதியை நோக்கிப் போனான். சுந்தர மூர்த்தி அவனிடம் ஓடிவந்தார்.

''என்னடா சொல்றாங்க அவங்க...?''

''அண்ணன் ஃப்ளைட்டுல வந்திருக்கு... ட்ரிப் ஷீட்ல பேர் இருக்கு... யாருமே பிழைச்சிருக்க சான்ஸ் இல்லேன்னு சொல்றாங்க...'' - சொல்லிவிட்டு முகத்தை மூடிக் கொண்டான் மோகன கிருஷ்ணன்.

பாகீரதி பிரமையடித்துப் போய் உட்கார்ந்திருந்தாள்.

''ஏண்டா, இப்படி வெந்து சாகவா வெளிநாட்டுக்குப் போனே...!'' - மனசு ஓயாமல் ஓலமிட்டது. உடம்பு அனிச்சையாய்க் குலுங்கியது. அடக்க முயற்சித்த கேவல்கள் வித்தியாசமான தொனியில் வெளிப்பட்டன. சுமதி அழுகிற பாகீரதியை மார்புகள் விம்ம, கண்ணீரோடு பார்த்தாள். அப்பாவின் பக்கமாய்த் திரும்பினாள்.

''அப்பா... அத்தையை வீட்டுக்கு கூட்டிக் கிட்டுப் போயிடலாம்... இங்கே இருந்தா துக்கத்தோட கனம் ரொம்பவும் ஜாஸ்தியாயிடும்...''

''மோகன்! அம்மாவைக் கைத்தாங்கலா காருக்குக் கூட்டிட்டுப்போ. சுமதி சொல்ற மாதிரி இங்கே இருந்தா பாகீரதியாலே தாங்கமுடியாது.''

மோகன் பாகீரதியை நெருங்கினான்.

''அம்மா... வாம்மா வீட்டுக்குப் போகலாம்...''

''எம்புள்ளை வராமே நான் வீட்டுக்கு வர மாட்டேண்டா...''

''அம்மா... நீ இப்படி அழக் கூடாது. ப்ரஷர்

அதிகமாயிடும்...''

''ஆகட்டுண்டா... எது அதிகமாகி நான் செத்தாலும் பரவாயில்லை... இருபத்தாறு வயசுப் புள்ளையை முழுசாக் குடுத்திட்டேண்டா. 'பாகீ! நீ அவனுக்கு சித்தியில்லை... அம்மா! உன்னோட காலம் இருக்கிறவரைக்கும் அவனை நீ கண்ணா பார்த்துக்கணும்'ன்னு சொல்லி உங்கப்பா அவனை என்கையில புடிச்சுக் குடுத்துட்டுக் கண்ணை மூடினார்டா மோகன்... அந்த புள்ளையை எமனுக்கு தாரை வார்த்துட்டேன்...டா...''

''அம்மா... இதப்பார்... அழாதே...''

''எம்புள்ளையோட உடம்பையாவது அவங்களைக் குடுக்கச் சொல்லுடா மோகன்...'' - மோகன் கிருஷ்ணன் பாகீரதியின் கையைப் பற்றினான். ''அம்மா... நீயே இப்படி உடைஞ்சு போய் அழுதா... என்னால என்னம்மா பண்ண முடியும்... வாம்மா... வீட்டுக்குப் போயிடலாம்.''

''நான் வரமாட்டேன்...'' - பாகீரதி திமிறினாள்.

''ஸார்...''

அம்மாவை சமாதானம் செய்து கொண்டிருந்த மோகன கிருஷ்ணன் குரல் கேட்டு திரும்பினான். ஆபீஸ் மானேஜர் சிற்றம்பலம் புன்னகையோடு நின்றிருந்தார்.

''என்ன மானேஜர்?''

''ஸார்... ஒரு மகிழ்ச்சியான செய்தி... பதினஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி உங்க பிரதர் மிஸ்டர் கங்காதரன் பாம்பேயிலிருந்து எஸ்.டி.டி. போட்டுப் பேசினார்...''

''றி...ய...லி...''

மோகனகிருஷ்ணன் வீறிட்டான்.

''எஸ் ஸார்... இன்னிக்கு சாயந்தரம் கொச்சி ஃப்ளைட்ல கோயம்புத்தூர் வர்றதா இன்ஃபார்ம் பண்ணியிருக்கார் ஸார்...''

''மானேஜர்! ஆர் யூ ஷ்யூர்?'' - மகிழ்ச்சியில் கத்தினான் மோகனகிருஷ்ணன்.

''சென்ட் பர்சென் ஷ்யூர் சார்...''

பாகீரதியும், சுந்தரமூர்த்தியும், சுமதியும் உடம்பு பூராவும் சந்தோஷ தீபங்களை ஏற்றிக்



கொண்டார்கள். பாகீரதி தன் வயதை மறந்து ஒரு துள்ளலோடு போய் மானேஜரின் கையைப் பற்றினாள். ஆனந்த அழுகை வெடிக்கக் கேட்டாள்.

''எம்புள்ளையோட குரலைக் கேட்டீங்களா மானேஜர்?''

''ஆமாங்கம்மா! கேட்டேன்... போயிங்குக்கு டிக்கெட் வாங்கியிருந்தும் எதிர்பாராத ஒரு காரணத்தாலே ஏர்போர்ட் போக முடியலையாம்...''

''மானேஜர், என்னோட வயித்துல பாலை வார்த்தீங்க. எம்புள்ளைக்கு இனிமே நூறு வயசு... நூறு வயசு...'' - கைகளைக் கொட்டிக் குழந்தையாய் சந்தோஷப்பட்டாள் பாகீரதி.

''வாம்மா வீட்டுக்குப் போகலாம்... சாயந்தரம் பீளமேடு ஏர்போர்ட்டுக்குப் போலாம்... கொச்சி ஃப்ளைட்ல வர்ற அண்ணனை முழுசா ஆசை தீரப் பார்க்கலாம்...''

சந்தோஷக் காற்று நாலா பக்கமும் கலபமாய் வர -

எல்லோருமாய் ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார்கள். காத்திருந்த காரை நோக்கி நடந்தார்கள். காரில் அடைபட்டு எல்லோருமாய் வீட்டை நோக்கி ஊர்ந்த போது -

சுமதி மட்டும் -

மனசின் மூலையில் கொஞ்சம் வருத்தமாயிருந்தாள்.

'கங்காதரன் இந்த போயிங்கிலேயே வந்திருக்கக் கூடாதா?'

## 3

''ஆசு... கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமே போச்சு... அப்படித்தானே சுமதி...!''

ரெஸ்டாரெண்ட்டின் ஒரு மூலையில் - கூடை நாற்காலியொன்றில் உட்கார்ந்து டோரினோவை உறிஞ்சிக் கொண்டிருந்த தீபக் - எதிரே உட்கார்ந்து மோவாயைத் தாங்கிக் கொண்டிருந்த சுமதியிடம் மெல்லிய குரலில் கேட்டான். டீன்ஏஜை முடித்துக் கொண்ட வாலிபன். பரு வைத்த முகம். பம்மின

கிராப். அகலமான மார்பைக் கவ்விய 'Always at
your Service' டிஸ்கோ பனியன். கவ்விய
கூலிங்கிளாஸ். யூனிவர்ஸிடியிலிருந்து டிகிரியை
வாங்க முடியாமல் தோற்றுப் போனவன்.

''ஒருத்தரோட சாவைக் கண்டு சந்தோஷப்படக்
கூடாதுன்னு சொல்லுவாங்க தீபக்...! இருந்தாலும்
கங்காதரன் போயிங் ஏர்கிராஷ்ல இறந்துட்டதா
தெரிஞ்சப்ப மேலுக்கு அழுதாலும் உள்ளுக்குள்ளே
ரொம்பவும் சந்தோஷப்பட்டுக்கிட்டிருந்தேன்.
அப்பா இனிமே அந்த கங்காதரனைக் கட்டிக்கச்
சொல்லி வற்புறுத்த முடியாதுன்னு நினைச்சு
உள்ளூர உற்சாகமா இருந்த எனக்கு அடுத்த
பதினைந்து நிமிஷத்துல ஆபீஸ் மானேஜர்.
'கங்காதரன் உயிரோட இருக்கார்'ன்னு வந்து
சொன்னதும் தூக்கி வாரிப் போட்டுட்டது...''

டோரினோவை உறிஞ்சிவிட்டு காலி பாட்டிலை
நகர்த்தினான் தீபக்.

''இனிமே என்ன செய்யப் போறே சுமதி?
உங்கப்பாவோட பேச்சுக்குக் கட்டுப்பட்டு அந்த
கங்காதரனைக் கல்யாணம் பண்ணிக்கப்
போறியா...?''

''அது மட்டும் இந்த ஜென்மத்துல நடக்காது
தீபக்...''

''உங்கப்பாவை எதிர்த்து உன்னால என்ன
பண்ண முடியும் சுமதி?''

''நம்ம விஷயத்தைப் பத்தி அப்பாகிட்டே
பேசப் போறதில்லை...''

''பின்னே?''

''அந்த கங்காதரன் கிட்டே பேசப் போறேன்''

''அவன் ஒத்துக்குவானா?''

'' 'நான் இன்னொருத்தரை விரும்பறேன்...
உங்களை எனக்குப் பிடிக்கலை'ன்னு ஒரு
பொண்ணு ஒருத்தன்கிட்ட சொன்ன
பின்னாடியும்... அவன் அவளைக் கட்டிக்க
வருவானா?''

தீபக் சிரித்தான். ''இத்தனை நாளைக்குப்
பின்னாடி இன்னிக்குத்தான் உனக்கு தைரியம்
வந்திருக்கு... இந்த தைரியம் கடைசி வரைக்கும்
இருக்கணும்...''



''கண்டிப்பா இருக்கும்...''

''சுமதி! எனக்கொரு டவுட்...''

''கேளுங்க...''

''கங்காதரன் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க
மறுத்தா... உங்கப்பா உன்னை அந்த மோகன
கிருஷ்ணனுக்குக் கல்யாணம் பண்ணித் தர
மாட்டாரா என்ன...?''

''மாட்டார்...''

''எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றே?''

''தீபக்! எங்கப்பாவைப் பத்தி உங்களுக்கு
சரியாத் தெரியாது. சாக்கடையில பத்து பைசா
விழுந்துட்டா, பத்து பைசாதானே. போயிட்டுப்
போறதுன்னு நினைச்சுட மாட்டார். மண்டி
போட்டு உட்கார்ந்து சாக்கடையில் கையை
விட்டுத் தேட ஆரம்பிச்சுடுவார். காசாசை
எக்கச்சக்கம். உங்களுக்கு முன்னாடியே ஒரு
தடவை சொல்லியிருக்கேன். கங்காதரன் மூத்த
சம்சாரத்தோட பையன். இந்த மோகன கிருஷ்ணன்
பாகிரதி அம்மாவோட பையன். செத்துப் போன
பாகிரதியோட புருஷன் தன்னோட சொத்து
முழுவதையும் கங்காதரன் பேருக்குத்தான் உயில்
எழுதி வெச்சிருக்கார். பாகிரதிக்கோ, அந்த அம்மா
வயத்துல பொறந்த மோகன கிருஷ்ணனுக்கோ ஒரு
பைசா கூட எழுதி வைக்கவில்லை.''

''அடப்பாவமே'' என்றான் தீபக்.

''இப்ப சொல்லுங்க தீபக். என்னோட அப்பா,
மோகன கிருஷ்ணனுக்கு என்னைக் கல்யாணம்
பண்ணிவைப்பாரா?''

''செத்தாலும் மாட்டார் என்னோட மாமா.''

சுமதி சிரித்தாள்.

தீபக் மெல்லிய குரலில் கேட்டான். ''ஆமா
சுமதி... அந்த கங்காதரன் பேர்ல எவ்வளவு
சொத்து இருக்கும்...?''

''நிறைய...!''

''நிறையன்னா...? எவ்வளவு லட்சம்...?''

''லட்சமா...? 'கோடி'ன்னு சொல்லுங்க
தீபக்...''

''சரி... எவ்வளவு கோடி?''

''ரெண்டு கோடி...''

www.cleanindians.com

''ப்பூ... இவ்வளவுதானா...?'' உதட்டைக் குவித்துக் காற்றை ஊதினான் தீபக். ''என்னை விட அந்த கங்காதரன் ரொம்ப ஏழை சுமதி... இந்த நிமிஷம் என்கிட்ட பத்து கோடி இருக்கு பார்க்கிறியா?''

சுமதி திகைத்து, ''எங்கே காட்டுங்க பார்க்கலாம்'' என்றாள்.

''கண்ணை மூடிக்கோ...''

சுமதி மூடிக் கொண்டாள்.

''வலது கையை நீட்டு...''

நீட்டினாள்.

''இப்போ... எண்ணிப்பார். எவ்வளவு கோடி இருக்குன்னு...'' - கையில் விழுந்த காகிதக் கற்றையை ஸ்பரிசித்துக் கண்களைத் திறந்தாள் சுமதி.

ஜனசேவா, விஜயலட்சுமி, கஞ்சன் ஜங்கா லாட்டரி சீட்டுகள்.

ஈஸ்ட்மென் கலர்களில் -

கண்ணைப் பறித்தன.

## 4

அலுமினியப் பறவை வானத்தின் உச்சத்தில் புள்ளியாய்த் தெரிந்தது.

ஏர்போர்ட்டின் லௌஞ்ச் சுறுசுறுப்பானது. ஏறக்குறைய எல்லோருமே கைகளில் பல சைஸ்களில் மாலைகளை வைத்திருந்தார்கள். பாகீரதி வானத்தை அண்ணாந்து பரவசத்துடன் பார்த்துவிட்டு, ''டேய் மோகன் - மாலையெல்லாம் ரெடியா எடுத்து வெச்சுக்கோ...'' என்றார்.

''வெச்சிருக்கேம்மா.''

ஆளுயர மாலையை இரண்டு பேர் தாங்கியபடி நின்றிருக்க, சுந்தரமூர்த்தி அருகில் இருந்த சுமதியிடம் கிசுகிசுப்பான குரலில் சொன்னார்.

''இதோ... பாரம்மா சுமதி... கங்காதரன் வந்ததுமே முதல் முதலா அந்த மாலையை நீதான் போடப் போறே.''

''அப்பா... மாலையை நீங்களே போடுங்க. எனக்கு எப்படியோ இருக்கு.'' - சுமதி



சுந்தரமூர்த்தியைப் பார்க்காமல் எங்கோ பார்த்தபடி சொன்னாள்.

சுந்தரமூர்த்தி கோபமாய் விழிகளை உயர்த்தினார். ''சுமதி! உம் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்கே... செத்துப் போனவன் பிழைச்சு வந்த மாதிரி கங்காதரன் வர்றான். எல்லாரும் பூரிச்ச முகமா நின்னுட்டிருக்காங்க. ஆனா நீ மட்டும் உம்முன்னு மூஞ்சியிலே சுரத்தேயில்லாமே நின்னுட்டிருக்கே. என்ன விஷயம்... உம்?''

''ஒண்ணுமில்லேப்பா... லேசாத் தலைவலி''.

''தலைவலி தானே! அதுபாட்டுக்கு இருந்துட்டுப் போகட்டும். மூஞ்சியைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வெச்சுக்கோ... மாலையை நீதான் போடப் போறே. முரண்டு பண்ணி, வந்த இடத்துல நான் சத்தம் போடும்படியா நடந்துக்காதே. ம்... அப்படித் தள்ளிப் போய் அத்தைக்குப் பக்கத்துல நின்னுட்டு ஏதாவது பேசிட்டிரு. ம்... போ''.

சுமதி அப்பாவின் கோபத்துக்குப் பயந்து பாகீரதியின் பக்கத்தில் போய் நின்று கொண்டாள். பாகீரதி அவளைப் பார்த்து புன்னகைத்தாள்.

''சுமதி! கங்காதரன் ஆறு மாசம் கழிச்சு வர்றான். அவன் வந்துட்ட சந்தோஷத்துல எல்லாரையும் மறந்து ஓடிப்போய் கட்டிப் பிடிச்சுக்காதே!''

சுமதிக்கு உடம்பு பூராவும் தீக்கட்டியால் தடவின மாதிரி எரிந்தாலும், வலுக்கட்டாயமாய்ப் புன்னகைத்து, செயற்கையாய் வெட்கப்பட்டாள்.

அலுமினியப் பறவை கொஞ்சம் கொஞ்சமாய் பெரிதாகியது. ஸ்பீக்கரில் வரப்போகிற விமானத்தின் ஜாதகத்தைச் சொன்னார்கள். ரன்வேயும், அதனைச் சுற்றிலும் பரவியிருந்த பொட்டல் வெளியும் அந்த மத்தியான நான்கு மணி வெய்யிலில், லேசாய் மஞ்சள் தூவிய மாதிரி தெரிந்தன. தூரத்தில் தெரிந்த பி.எஸ்.ஜி. கல்லூரியின் கட்டிடங்களும், சி.ஐ.டி. பொறியியல் கட்டிடங்களும் தீப்பெட்டி சைஸில் தெரிந்தன. வானம் மேகங்களால் கலங்கப்படாமல், காற்று வேகமில்லாமல் எல்லாமே ஒரு துல்லியமான சந்தோஷத்தில்

இருப்பது போல் பிரமையை அளித்துக் கொண்டிருந்தன.

விமான நிலையத்தை மோப்பம் பிடித்துக் கீழே தாழ்ந்தது விமானம்.

ஸ்டெப்ஸைத் தள்ளிக்கொண்டு இரண்டு பேர் போனார்கள். சுமதி நகத்தைக் கடித்துத் துப்பி அந்தப் பரபரப்பான நிமிஷங்களைக் கழிக்க - பாகீரதி ரன்வேயைத் தொட்டு ஒரு பெரிய விளையாட்டுப் பொம்மை மாதிரி ஓடிவரும் விமானத்தையே பார்த்தாள்.

ஜ்ஜ்ஜிர்ர்ர்ர்.

எஞ்சின் காற்றைக் கெடுத்து, எல்லோருடைய செவிப்பறையையும் தட்டிப்பார்த்தது. விமானம் சாவகாசமாய்ச் சுழன்று - அரைச்சுற்று சுற்றி நின்றது.

விசிறிகளின் சுழற்சிகளை நிறுத்தி - ஒரு பசு மாடாய் நின்றது.

ஸ்டெப்ஸ் ஓடிப் போய் விமானத்தின் இடுப்பில் கோத்துக் கொள்ள, பயணித்தவர்கள் இறங்க ஆரம்பித்தார்கள். தளர்வான, அமர்த்தலான, சொகுசான... விதவிதமான நடைகளோடு வெளிப்பட்டார்கள்.

ப்ரீஃப்கேஸோடு ஒரு வழுக்கைத் தலை ஆசாமி.

செந்நிற முகத்தோடும் நெடிய உயரத்தோடும் ஒரு ஆங்கிலோ இந்தியன்.

அவனைத் தொடர்ந்து தெறிக்கிற பாதி மார்புகளோடு அவனுடைய மனைவி (எலிமா?)

வேட்டி, முழுக்கை சர்ட்டோடு இரண்டு கோயமுத்தூர் மில் ஓனர்கள்.

அப்புறம் ஒரு சின்னக் குடும்பம்.

பாகீரதி தன் விழிகளைப் பரபரவென்று சுழற்றினாள்.

'கங்காதரா... வெளியே வாடா.... சீக்கிரம்...'

பாகீரதி நினைத்த அந்த வினாடியே வெளிப்பட்டான் கங்காதரன். சாம்பல் நிற ஃபுல் சூட்டில் கழுத்தில் கட்டிய வெள்ளை 'போ'வோடு தெரிந்தான். புது நிறம். அப்படியே அப்பா சங்கரலிங்கத்தின் கண்கள். முக விலாசத்தில் படிப்பு வாசனை அதிகமாகவே அடித்தது.



மீசையின் அடர்த்தியைக் குறைத்திருந்தான். தொப்பையின் கன பரிமாணத்தைக் கூட்டியிருந்தான். அவன் கையை உயர்த்தி அசைக்க -

லௌஞ்சில் இருந்த எல்லோரும் 'ஹேய்ய்ய்' என்று உற்சாக அசைப்பில் கைகளை அசைத்தார்கள். பாகீரதி நின்ற இடத்திலேயே நிலை கொள்ளாமல் தவித்தாள்.

''வாடா... என் ராசா...''

சந்தோஷப்பட்டவள் சட்டென்று முகம் மாறினாள்.

'யார் அந்தப் பெண்? - கங்காதரன் தோளை ஒட்டிக்கிட்டே நடந்து வர்றவ?'

பாகீரதி மட்டுமில்லை.... எல்லோரும் பார்வையை லேசாய் மாற்றினார்கள். கங்காதரனோடு இழைந்து வந்தவள் அதிசிவப்பாய் இருந்தாள். அடர்த்தியான பச்சையில் கவுன் மாதிரி ஏதோ போட்டிருந்தாள். தோளில் பாசிகளால் ஆன ஒரு பையைத் தொங்க விட்டிருந்தாள். பாப் கூந்தல் ஏர்போர்ட்டின் திறந்தவெளிக் காற்றில் பட்டு நூலாய்த் தெரிந்தது.

சுந்தரமூர்த்தி முகம் மாறி பாகீரதியை நெருங்கினார்.

''பாகீரதி...! கங்காதரனோட வர்றது யாரு?''

''தெரியலைண்ணா...''

''எவளையோ இழுத்துட்டு வந்துட்டானா?''

''கங்காதரன் அப்படிப்பட்டவன் இல்லைண்ணா! ரயில் பிரயாணத்துல சில பேர் பழகமாற மாதிரி பிளேன் பயணத்திலேயும் சில பேர் பழக்கமாகி... அந்தப் பழக்கம் ஏர்போர்ட் வரைக்கும் நீடிக்கிறதுண்டு...''

கங்காதரன் அந்தப் பெண்ணோடு வந்து கொண்டிருந்தான்.

எல்லோரும் அப்படியே வெறித்துக் கொண்டு நின்றார்கள்.

கங்காதரன் வேக வேகமாய் வந்து பாகீரதியின் காலில் விழுந்து எழுந்தான்... ''அம்...மா...'' கைசேர்த்துக் கும்பிட்டான்.

''வாடா என் ராசா... கங்கா...'' - அவன் கன்னங்களைத் தொட்டுத் திருஷ்டி முறித்தான்

பாகீரதி. ''டேய் மோகன்... அண்ணனுக்கு மாலையைப் போடு...''

மாலை போட வந்த மோகனைப் புன்னகையால் தடுத்து நிறுத்தினான் கங்காதரன்.

''ஒரு நிமிஷம் பொறு மோகன்.... வெரோனிகாவை எல்லார்க்கும் அறிமுகப்படுத்திடறேன்... அப்புறமா ரெண்டு பேர்க்குமே சேர்த்து மாலை போடுங்க...வி...அக்செப்ட்....''

''கங்காதரா! யார்டா இந்தப் பொண்ணு?'' - பாகீரதி கேட்க.

கங்காதரன் சொன்னான்.

''என்னோட மனைவி...''

## 5

**ஹா**ல் பூராவும் ரோஜா இதழ்கள் ரத்தப் பொட்டுகளாய்ச் சிதறியிருந்தன. முகங்களில் இன்னமும் அதிர்ச்சி உறைந்து போயிருக்க, பாகீரதி, மோகனகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி அசையாமல் நின்றார்கள். வெரோனிகா ஒரு குழி முயல் மாதிரி கங்காதரனுக்குப் பின்னே ஒண்டிக் கொள்ள - கங்காதரன் முகத்தில் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் பகீரதியை ஏறிட்டான்.

''என்னம்மா... ஏர்போர்ட்டிலிருந்து வந்தது மொதக் கொண்டு பார்க்கிறேன்... யாருமே பேச மாட்டேங்கறீங்க. ஏதாவது பேசித் திட்டுங்கம்மா...''

சுந்தரமூர்த்தி பட்டென்று வெடித்தார்.

''நீ இப்படிச் செய்வேன்னு நாங்க கொஞ்சமும் எதிர்பார்க்கலை.''

''கல்யாணம் பண்ணினது தப்புன்னு சொல்றீங்களா?''

''கல்யாணம் பண்ணிக்கிறது தப்பான காரியமில்லை கங்காதரா... யாரைப் பண்ணியிருக்கேங்கிறதுலதான் தப்பும் சரியும் இருக்கு...''

கங்காதரன் புன்னகைத்தான்.

''நான் ஒரு நல்ல பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணியிருக்கேன். வெரோனிகா இந்தியாவில் பிறந்தவதான். தமிழ் பேசுவா. லாஸ் ஏஞ்சல்ஸ்



டி.வி.ஸ்டேஷன்ல அனௌன்ஸரா ஒர்க் பண்ணிட்டிருந்தா. ஒரு மியூசிக் ப்ரோக்ராம்ல ரெண்டு பேரும் சந்திச்சோம். மூணு மாசம் நண்பர்களாப் பழகினோம். பின்னாடி ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுகிட்டு கல்யாணம் பண்ணிகிட்டோம்.''

பாகீரதி சன்னமான குரலில் குறுக்கிட்டாள்.

''கங்காதரா... நீ கல்யாணம் பண்ணிகிட்டதைப் பத்தி எனக்கு சந்தோஷந்தான். பொண்ணு உனக்குப் பிடிச்சிருந்தா சரிதான்... ஆனா... ஒரு வார்த்தை எங்களையெல்லாம் கேட்டுகிட்டு நீ கல்யாணம் பண்ணியிருக்கலாம்.... அதான் வருத்தம்.''

''பாகீரதி!'' - சுந்தரமூர்த்தி சள்ளென்று எரிந்து விழுந்தார்.

''என்னண்ணா?''

''நீ கங்காதரனுக்கு வக்காலத்து வாங்கிப் பேசறியா. சுமதி இந்த ஆறு மாசமா அவனுக்காகவே காத்திட்டிருந்ததை மறந்துட்டியா? 'கங்காதரன் வரட்டும்... கல்யாணத்தைப் பேசி முடிவு பண்ணிடலாம்'ன்னு இன்னிக்குக் காலையில கூட நீ சொன்னே!''

''ஆமா சொன்னேன். அதுக்கு இப்போ என்ன செய்யலாம்? நீயே சொல்லண்ணா! கங்காதரன் இஷ்டப்பட்டு ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிகிட்டு வந்துட்டான். அந்தப் பொண்ணைத் தொரத்திட்டு சுமதியை கட்டி வெக்கச் சொல்றியா?''

''பாகீரதி!'' - கத்தினார் சுந்தரமூர்த்தி.

''இதோ பாரண்ணா... இனிமே இதைப்பத்திப் பேசிப் பிரயோஜனமில்லை. சுமதியை வேற யாருக்காவது முடிச்சுரு.''

''அது எனக்குத் தெரியும். எம் பொண்ணைக் கட்டிக்காமே ஏமாத்தின பாவம் உன்னையும் அந்த கங்காதரனையும் சும்மா விடாது.''

''அண்ணா...!'' சும்மா வார்த்தைகளை நெருப்பாட்டம் வீசிட்டிருக்காதே! வாழப்போறவங்களை வாய்க்கு வந்தபடி பேசாதே...''

''அப்படித்தான் பேசுவேன். என்னோட வயிறு

பத்திக்கிட்டு எரியுது''.

''பத்திக்கிட்டு எரியுதா? அப்பாஉன்னா வீட்டுக்குப் போய் ரெண்டு டம்ளர் பச்சைத் தண்ணியைக் குடிச்சுட்டுக் கவுந்து படுத்துக்கோ போ.''

''பாகி!''

''அண்ணா! இந்த சத்தமெல்லாம் இங்கே போடாதே... சரியோ, தப்போ கங்காதரன் கல்யாணத்தைப் பண்ணிட்டு வந்துட்டான். இனிமே அதைப்பத்திப் பேசறதுல ஒரு பிரயோஜனமும் இல்லே... பிரச்னையை ஊதிப் பெரிசு பண்ணாமே மொதல்ல வீட்டுக்கு போங்க.''

''ஊரு, பேரு, ஜாதி, ஜனம் தெரியாதவளை உன் மகன் இழுத்துட்டு வந்திருக்கான். அவனைக் கண்டிச்சுப் பேச உனக்கு வக்கில்லை. என்னை எதிர்த்துப் பேசறயா?''

''அண்ணா! நீ மொதல்ல வெளியே போ.''

''பாகி!''

''உம்... போ. நான் உன்னைவிட வயசுல சின்னவ. உன்னை ஏறுமாறாப் பேசறதுக்குள்ளே தயவு பண்ணி வெளியே போயிடு.''

''போறேன்! ஒன்னை மட்டும் கொல்லிட்டுப் போறேன். வெள்ளைத் தோலைப் பார்த்து மயங்கி உம்பிள்ளை எவளையோ இழுத்துட்டு வந்துட்டான். ஆனா அவன் சந்தோஷமா இருக்க மாட்டான்.''

தலை கலைந்து போன சுந்தரமூர்த்தி அங்கவஸ்திரத்தை உதறித் தோளில் போட்டுக் கொண்டு விருட்டென்று கிளம்பினார். அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பாகிரதி, அவர் தலை மறைந்ததும் வரவழைத்துக் கொண்ட புன்னகையோடு கங்காதரனின் பக்கமாய்த் திரும்பினாள். அவன் கேட்டான்.

''என்னம்மா, மாமாவுக்கு இவ்வளவு கோபம் வருது?''

''அவரோட பெண்ணை நீ கட்டிக்கலைங்கிற கோபம் தான். இப்ப இருக்கிற ஆத்திரத்துக்கு என்னமோ பேசிட்டுப் போயிட்டார். நாளைக்கே தலை குனிஞ்சுட்டு வந்து, 'பாகி! நேத்தைக்கு ஆத்திரத்துல என்னென்னமோ வாய்க்கு வந்தபடி



பேசிட்டேன். மனசுல ஒண்ணும் வெச்சுக்கா தம்மா'ன்னு சொல்லுவார். அவரோட சுபாவமே அப்படித்தான்.''

''அம்மா.''

''என்னடா?''

''எம்மேல உனக்குக் கோபமில்லையே?''

''கொஞ்சம் கூட இல்லே. ஏர்போர்ட்ல வந்த கோபம் வீட்டுக்கு வரவர காணாம போயிடுச்சு. பொண்ணு லட்சணமா இருக்கா. முடியைக் கொஞ்சம் வளர்க்கச் சொல்லி... சேலையை சுத்திட்டா நம்ம ஊர் பொம்பளைமாதிரி ஆயிடறா. அவளுக்கு தமிழும் தெரியும்னு நீ சொல்லியிருக்க...''

''ஆமாம்மா... தமிழ் பேசுவா. ஆனா கொச்சையா இருக்கும். பேசச் சொல்லட்டுமா? வெரோனிகா! அம்மாவுக்கு வணக்கம் சொல்லு.''

''வணக்கம்'' - வெரோனிகா சந்தோஷமாய்க் கை குவித்தாள்.

''இந்த ஊரோட பேரு என்ன?''

''கோயம்பத்தூர்.''

''எம் பேரு.''

''கெங்காடரன்.''

மோகன கிருஷ்ணனும் பாகிரதியும் சிரித்தார்கள். ''இது போதும்.''

''வீடி... நெல்லா இருக்கு.'' - வெரோனிகா பார்வையைச் சுற்றும் முற்றும் அலைய விட்டபடி சொல்ல - கங்காதரன் சிரிக்காமல் திருத்தினான். ''வீடி இல்லே வெரோனிகா... வீடு... 'வீடு நல்லா இருக்கு'ன்னு சொல்லணும்''.

''நான் அப்படித்தானே சொல்லிச்சு.''

கங்காதரன் பாகிரதியின் பக்கமாய் திரும்பி னான். ''அம்மா, இன்னொரு விஷயம் சொன்னா வெரோனிகாவை நீ கட்டிப் பிடிச்சு முத்தம் குடுப்பே.''

''என்ன விஷயம்?''

''காலையில ஆக்ஸிடெண்டு ஆன போயிங்கைப் பிடிக்கிறதுக்காக ஹோட்டலிலிருந்து ஏர்போர்ட்டுக்குப் புறப்பட்டோம். ஏர்போர்ட்

டுக்கு வந்ததும்தான் தெரிஞ்சுது ஒரு முக்கியமான
ப்ரீஃப்கேஸை ஹோட்டல் ரூமிலேயே
விட்டுட்டோம்ன்னு. அந்த ப்ரீஃப்கேஸை
மறக்காம எடுத்துக்கும்படி வெரோனிகாகிட்டே
சொல்லியிருந்தேன். அவ எப்படியோ மறந்து
வெச்சுட்டு வந்துட்டா... பாஸ்போர்ட், டிக்கெட்
எல்லாமே அந்த ப்ரீஃப்கேஸ்லதான் இருந்தது.
ஹோட்டலுக்கு போன் பண்ணி விஷயத்தைச்
சொல்லி - ப்ரீஃப்கேஸ் எங்க கைக்கு வந்துசேர்ற
துக்குள்ளே போயிங் போயிடுச்சு... வெரோனிகா
அந்த ப்ரீஃப்கேஸைக் கையோட கொண்டு
வந்திருந்தா இந்த நிமிஷம் ரெண்டு பேருமே கருகி
சமுத்திரத்திலே மிதந்திட்டிருப்போம்...''

பாகீரதி விழிகளில் நீர் மின்ன நாதழுதழுத்தாள்.

''தாலி பாக்கியம்ங்கிறது அதுதாண்டா
கங்காதரா... அம்மா வெரோனிகா...! இனிமே உங்க
ரெண்டு பேருக்கும் ஆயுசு நூறு... நீ அவளைக்
கைப்பிடிச்ச நேரம் அமோகமான நேரம்...''

வெரோனிகா தன் ரத்தச் சிவப்பான ஈறுகள்
தெரியச் சிரித்தாள். ''நாங்க ரெண்டு பேரும்
உயிரோட இருக்கிறதுக்குக் காரணம் உங்களோட
நமஸ்காரம்தான்....''

''நமஸ்காரமில்லை... வெரோனிகா...
ஆசீர்வாதம்''

''ஹங்! ஆசீர்வாதம்...''

பாகீரதி சிரிப்போடு கங்காதரனைப் பார்த்தாள்.

''கங்காதரா.. வெரோனிகாவைக் கூட்டிக்கிட்டு
டைனிங் டேபிளுக்குப்போ... சாப்பிட எதாச்சும்
கொண்டு வர்றேன்...''

''ஆமாம்மா. எனக்கும் லேசா பசி...
வெரோனிகா! கம் ஹேவ் சம் அஃப் டிஷ்ஷஸ்
அண்ட் எ கப் ஆஃப் காப்பி...''

வெரோனிகா கங்காதரனோடு கை கோர்த்து
எழுந்து டைனிங் டேபிளை நோக்கி நடந்தாள்.
வாஷ்பேஸினில் கைகளை சுத்தம் செய்து
கொண்டு உட்கார்ந்தார்கள்.

''கெங்காதர்...''

''என்ன வெரோனிகா?''

''அவங்க ஒங்களுக்கு சித்திதானே?''



''ஆமா.''

''நீங்க... அவங்களை சித்தின்னு கூப்பிடாமே
அம்மான்னு கூப்பிடுறீங்களே ஏன்?''

''சித்தின்னு கூப்பிட்டா அம்மாவுக்குக் கோபம்
வந்திடும்.. சின்ன வயசில அப்படிக் கூப்பிடப்
போய் ரெண்டு தரம் அடி வாங்கியிருக்கேன்.
'பெத்தாதான் அம்மாவா... நானும் அம்மா
தாண்டா' ன்னு சொல்லிச் சொல்லியே என்னை
வளர்த்தாங்க... நான் மூஞ்சி வாடினா அவங்க
துடிச்சுப் போயிடுவாங்க...''

''உங்க மதர்க்கு ரொம்பவும் டெண்டர்
ஹார்ட்.''

''இனிமே எங்கம்மாவை நீ அத்தைன்னுதான்
கூப்பிடணும்.''

''செரி...''

''செரி இல்ல, சரி...''

''செரி...''

கங்காதரன் சிரித்தான். ''தமிழ் மொழியை நீ
ரொம்பவும் சிதைக்கறே வெரோனிகா.''

பாகீரதி சமையலறையிலிருந்து வந்து கொண்டே
சொன்னாள் - கையிலிருந்த பாத்திரத்தில் எதுவோ
மணத்தது.

''ரெண்டு மாசம் போனா நல்லா பேசிட்டுப்
போறா...''

''அம்மா...!''

''என்னடா கங்கா...?''

''நானும் வெரோனிகாவும் இந்த பங்களாவில்
இருந்தா.... வர்ற சொந்தக்காரங்களுக்கு நாங்க ஒரு
பேச்சுப் பொருளா ஆயிடுவோம்... நாங்க
கல்யாணம் பண்ணிக்கிட்ட இந்தச் சலசலப்பு
அடங்கற வரைக்கும் ரெண்டு பேரும் ஊட்டியில
தங்கலாம்ன்னு எண்ணம். நீ என்னம்மா
சொல்றே...?''

''அதுவும் சரிதான்.''

''நம்ம ஊட்டி எஸ்டேட் பங்களாவில கெஸ்ட்
யாராச்சும் இருக்காங்களாம்மா?''

''யாருமில்லேப்பா.''

''அப்போ நாளைக்கே நானும் வெரோனிகாவும்
புறப்படறோம்.''

# 6

ஊட்டியில் வெயில் பயந்து பயந்து அடித்தது.

பொட்டானிகல் கார்டனின் புல்தரை மேட்டு உச்சியில் மல்லாந்து படுத்து ப்ளம்ஸ் பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த கங்காதரனும் வெரோனிகாவும் அதிகபட்ச சந்தோஷ நிமிஷங்களில் இருந்தார்கள்.

''வெரோனிகா...!''

''ம்...''

''இந்தப் பழம் புளிக்குது... உன் கையில இருக்கிற பழத்தைக் குடேன்...''

''அய்யோ... சப்பிட்டேன்...''

''அப்போ இனிக்கும்... குடு...''

''ஊ... ஹூ...ம்... மாட்டேன்....''

கங்காதரன் வெரோனிகாவின் கையிலிருந்த ப்ளம்ஸ் பழத்தைப் பிடுங்க எத்தனிக்க அவள் புல்தரையின் சரிவில் மெத் மெத்தென்று உருண்டாள். கங்காதரனும் உருண்டான். சம தளத்தில் வந்து மல்லாந்து விழுந்த வெரோனிகாவின் மேல் முழுவதுமாய்க் கவிழ்ந்தான் கங்காதரன். அப்படியே ஒரு நிமிஷம் கிடந்தான்.

''டேய்... லைவ் ஷோ நடக்கப் போகுது...''

குரல் கேட்க, மெல்லத் தலையை உயர்த்தினான் கங்காதரன்.

புல் தரைக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு செடிக்குக் கீழே அந்த மூன்று பேரும் நின்றிருந்தார்கள். இரண்டு பேர் ஜெர்கின் கோட்டிலும் ஒருவன் உல்லன் சட்டையிலும் படிப்பு வாசனை யில்லாமல் தெரிந்தார்கள். கங்காதரனை லட்சியம் பண்ணாமல் பேசினார்கள்.

''என்னமா இருக்காடா...! செஸ்ட்டைப் பாரு. அசத்தறா...!''

''வெள்ளைக்காரி மாதிரி இருக்கா...''

''லைவ் ஷோ நடத்தினா நல்லாயிருக்கும்...''

கங்காதரன் எழுந்து உட்கார்ந்தான். வெரோனிகாவின் தோளைத் தட்டினான். ''வெரோனிகா... எழுந்திரு...!



''ஏன் கெங்காதர் எழுந்திட்டீங்க? அப்படியே படுங்க...!''

''வெரோனிகா! யாரோ மூணு பேர் நம்மளைப் பார்த்து கமெண்ட் பண்றாங்க.. வா போயிடலாம்...''

''யாரது?''

''அதோ அவங்க தான்...!''

வெரோனிகா திரும்பிப் பார்த்தாள். மூன்று பேரும் அவளைப் பார்த்து புன்னகைத்தார்கள்.

''யாரோ... ரௌடீஸ்... வாங்க போயிடலாம்..'' - வெரோனிகா எழுந்து கங்காதரனின் கையைக் கோத்து நடக்க ஆரம்பித்தாள். அந்த மூன்று பேரும் மெல்லத் தொடர்ந்தார்கள்.

''டேய் குமாரு...''

''என்னடா ஜோ...?''

''புல்லு ஒட்டியிருக்கு... தடவி விடேன்டா...''

''எங்கேடா ஒட்டியிருக்கு?''

''வெள்ளைக்கிளியோட பின்பாகத்துல...! அம்மாடி... நடக்கிறப்போ என்னமா அசையுது...''

கங்காதரன் மனசுக்குள் உஷ்ணமாகி நிற்க முயன்றான். வெரோனிகா அவன் கையைப் பற்றினாள். ''பேசாமே வாங்க! பேசினா ரகளையாயிடும். அவங்களைப் பார்த்தா ரோக்ஸ் மாதிரி தெரியுது.''

கோபத்தை மென்று கொண்டு நடந்தான் கங்காதரன்.

''டேய்! ஜோ...'' ஒருவன் கத்தினான்.

''என்னடா?''

''அவ கூடப் போறவனைப் பார்த்தா உனக்கு என்ன தோணுது?''

''புருஷன் மாதிரி தோணுது...''

''புருஷனா...?'' கெக்கெக்கென்று சிரித்தான் இன்னொருவன்.

''ஏண்டா சிரிக்கிறே?''

''அவளை அவன் தட்டிக்கிட்டு வந்திருக்கான்டா... கட்டிக்கிட்டு வரலை... ரெண்டு நாள் போனா நாம்பளும் ரேட் பேசலாம்.''.

யாரோ இரண்டு தோள்களையும் பிடித்து திருப்பிவிட்ட மாதிரி திரும்பினான் கங்காதரன்.

''என்னடா சொன்னீங்க...?'' உடம்பு பூராவும் பாய்ந்த கோப ரத்தத்தோடு வேகமாய் ஓடிவந்து ஒருவன் மேல் பாய்ந்தான். கையை மூர்க்கமாய் வீசி அவனுடைய தாடையைப் பெயர்த்தான்.

இடது பக்கமாய் வந்தவனைக் காலால் எகிறி அடி வயிற்றில் வெடித்தான்.

பின்பக்கமிருந்து பாய்ந்தவனை இடது கையால் தடுத்து வலது கை முஷ்டியால் நுனி மூக்கை 'ப்னக்' என்று சேதமாக்கிச் சிவப்பைக் கொட்ட வைத்தான்.

வெரோனிகா வீறிட்டாள்.

கார்டனில் தூரதூரமாய் இருந்தவர்கள் ஒரே புள்ளியை நோக்கி வேக வேகமாய் ஓடிவந்தார்கள். மூன்று பேர்களுக்கு மத்தியில் காண்டா மிருகமாய்ச் சுழன்று கொண்டிருந்த கங்காதரனைப் பிரித்தெடுத்தார்கள்.

''யூ... டர்ட்டி ராக்ஸ்.... கட்டின புருஷன் கூட வர்றப்பவே இத்தனை ஆட்டம் போடறீங்களா?'' கங்காதரன் மூச்சிரைக்கக் கத்தினான். வெரோனிகா அவன் தோளோடு ஒட்டியிருந்தாள்.

''என்ன சார்? என்ன கலாட்டா?''

''ஹஸ்பெண்ட் அண்ட் ஒய்ஃப் ஒண்ணாப் போனா அசிங்கமா பேசறாங்க ஸார்...''

''யார்...? இவங்க மூணு பேருமா...?''

''ஆமா...''

கும்பல் பெட்ரோலில் பற்றிக் கொண்ட தீயாய் ஆவேசப்பட - அந்த மூன்று பேரில் ஒருவன் அந்த சொற்பக் கும்பலைப் பார்த்து கைகூப்பினான். ''நாங்க பேசினதை ஸார் தப்பாப் புரிஞ்சுட்டார் போலிருக்கு. 'கூடப் போற பொண்ணைப் பார்த்தா உன்னோட தங்கச்சி மாதிரியே இருக்கா பாருடா'ன்னு நான் இவன் கிட்டே சொன்னேன். அவனும், 'ஆமாண்டா. ஜாடையெல்லாம் அதே மாதிரிதான் இருக்கு.... ஆனா என்னோட தங்கச்சியைக் காட்டிலும் அந்தப் பொண்ணு குண்டு' ன்னு சொன்னான்.... நாங்க ரெண்டு பேரும் அப்படிப் பேசிட்டிருந்ததை இவர் தப்பா புரிஞ்சுட்டு அடிக்க வந்துட்டார்....''

அவன் சொல்லச் சொல்ல -



கும்பல் ஒரு விநாடி நிதானித்தது. கங்காதரன் கத்தினான். ''இவங்க பொய் சொல்றாங்க.''

''நாங்க எதுக்காகப் பொய் சொல்லணும்? அப்படிப் பொய் சொல்லியிருக்கோம்னு நீங்க நினைச்சா எங்களை அடிங்க'' - மூன்று பேரும் புல்தரையில் மண்டியிட்டு உட்கார்ந்தார்கள்.

கும்பலில் ஒருவர் சட்டென்று மனம் கரைந்தார். ''சரி விடுங்கய்யா, அவங்கதான் 'நாங்க அப்படிச் சொல்லலை'ன்னு சொல்றாங்களே... இவங்க மூணு பேரும் பேசிட்டிருந்ததை இவரும் தப்பாவே புரிஞ்சிருக்கலாம்... போங்க ஸார், பிராப்ளத்தைப் பெரிசாக்காமப் போயிட்டே இருங்க...''

கங்காதரனும் வெரோனிகாவும் அந்த மூன்று பேரையும் பஸ்பப் பார்வை பார்த்துக் கொண்டே நடந்தார்கள். மூவரும் எதிர்த்திசைப் பக்கமாய் நடந்து கார்டனுக்கு வெளியே வந்தார்கள்.

சற்றுத் தொலைவில் பிளாட்பாரத்தையொட்டின மாதிரி அந்தச் சின்ன பியட் கார் நின்றிருக்க, அதை நோக்கி வேகமாய்ப் போனார்கள். காரை மொய்த்தார்கள்.

காருக்கு வெளியே தலையை நீட்டினார் சுந்தரமூர்த்தி.

''என்ன... ரெண்டு பேரையும் பார்த்துக்கிட்டீங்களா?''

''பார்த்தது மட்டுமில்லை. கைகலப்பும் ஆயிடுச்சு'', மூவரில் ஒருத்தன் சொல்ல, லேசாய்க் கோபப்பட்டார் சுந்தரமூர்த்தி.

''கைகலப்பா? என்ன சொல்ற ஜோ?''

''ஆமா ஸார்! நம்ம தோஸ்த்துல ஒருத்தன் அந்தப் பொண்ணைப் பற்றி அசிங்கமாப் பேசிட்டான். கங்காதரனுக்கு கோபம் வந்து தாக்க ஆரம்பிச்சிட்டான்''

சுந்தரமூர்த்தி பொசுக்கென்று கோபப்பட்டார். ''ரெண்டு பேரையும் அடையாளம் பார்த்துக்கச் சொல்லி அனுப்பிச்சா, முட்டாள் தனமா மோதிட்டு உங்களை அடையாளம் காட்டிக்கிட்டு வந்திட்டீங்களே!''

''ஸாரி ஸார்... தெரியாத்தனமா மோதிக்கிட்டோம்.''

''அதுபோகட்டும். ஆள் எப்படி?''

''ரொம்பவும் மூர்க்கம் சார்.''

''இன்னும் ஒரு வாரம் ஊட்டியில தான் இருப்பாங்க ஜோ... அதுக்கு முன்னாடி அவனைச் சிதைக்கணும்.'' - சுந்தரமூர்த்தி தாழ்ந்த குரலில் சொல்ல, அந்தக் கடாமாட்டுத் தலையன் ஜோ புன்னகைத்தான்.

''முடிச்சுடறோம் சார்.''

''கொன்னுடாதீங்க. உடம்புல ஏதாவது ஒரு பாகம் ஊனமாகணும். அவனும்சரி அவளும் சரி வாழ்க்கையில் சிரிக்கவே கூடாது.''

''சிரிக்க மாட்டாங்க சார்.''

ஜோ கோபத்தில் கடைவாயை அரைத்தான்.

சுந்தரமூர்த்தி காரை உசுப்பினார். ''ஓ...கே...ஜோ... நீயும் உன்னோட சகாக்களும் காரியத்தை முடிச்சுட்டு உடனடியா கோயமுத்தூர் வந்துடுங்க. பேசின பணத்தைக் குடுத்துடறேன்.''

''சரி ஸார்.''

ஜோ பவ்யமாகச் சிரித்தான்.

காரைக் கிளப்பினார் சந்தரமூர்த்தி.

## 7

**வ**லைக் கூடையில் கேக் பாக்கெட்டையும், பிஸ்கெட் பொட்டலத்தையும், காபி பிளாஸ்கையும் திணித்துக் கொண்டே வெரோனிகா கேட்டாள்.

''கெங்காதர்! தொட்டபெட்டா தூரமா?''

ஷூவை மாட்டி லேஸை முடிச்சுப் போட்டுக் கொண்டிருந்த கங்காதரன் நிமிர்ந்தான். ''ரொம்ப தூரமில்லை வெரோனிகா. ஆறு கிலோ மீட்டர் தூரந்தான். போயிட்டு ஒரு மணி நேரத்துல வந்துடலாம்.''

''இப்போ மணி மூணு. சாயந்திரம் அஞ்சு மணிக்குள்ள வந்துடலாமா?'' - தன் கையில் கட்டியிருந்த ஃபேவர்லூபா மினிவாட்சைப் பார்த்தபடியே கேட்டாள் வெரோனிகா.



''ம்... வந்துவிடலாம்.''

இருவரும் புறப்பட்டு காரை நோக்கி வந்த அதே விநாடி டெலிபோன் கூப்பிட்டது.

கங்காதரன் எரிச்சலாய் உள்ளே வந்து ரிஸீவரைப் பிடித்துத் தூக்கினான். ''ஹலோ... கங்காதரன் ஹியர்.''

மறுமுனையில் அந்தப் பாசக் குரல் கேட்டது. ''கங்காதரா...! நான் அம்மா பேசறேன்.''

''அட அம்மாவா... எப்படிம்மா இருக்கீங்க?''

''நல்லாத்தான் இருக்கேன். நீயும் வெரோனிகாவும் எப்படி இருக்கீங்க?''

''ஊட்டியை என்ஜாய் பண்றோம். வெரோனிகாவுக்கு ஊட்டி ரொம்பவும் பிடிச்சிருக்காம். தினசரி ஒவ்வொரு இடமாப் போறோம். இப்பக் கூட தொட்டபெட்டா புறப்பட்டிட்டிருக்கோம்.''

''இந்நேரத்துக்கா?''

''ஏம்மா?''

''மணி மூணுக்கு மேல ஆகுது தொட்டபெட்டா சிகரத்தை நிறைய மேகம் வந்து மூடியிருக்கும்... மேல இருந்து ஒண்ணையும் பார்க்க முடியாதே...''

''சும்மாவாவது போயிட்டு வர்றோம்மா!''

''சரி... சரி... ஊட்டியை விட்டு என்னிக்குப் புறப்படறீங்க? நாலைஞ்சு நாள் ஆகுமா? இல்லே அதுக்கு மேலேயும் இருந்துட்டு வர்றீங்களா?''

''வெரோனிகாவுக்கு என்னிக்கு ஊட்டி புளிக்குதோ... அன்னிக்குத்தான் கோயமுத்தூர் கிளம்பி வருவோம்.''

பாகீரதி மறுமுனையில் சிரித்தாள்.

''ஒண்ணும் அவசரமில்லடா கங்காதரா... மெதுவாவே வா... போனை வெச்சுடட்டுமா?''

''சரிம்மா...''

ரிஸீவரைச் சாத்திவிட்டு வெளியே வந்தான். சமையற்காரனும் தோட்டக்காரனும் வராந்தாவின் ஓரமாய் நின்றிருந்தார்கள்.

''வீட்டைப் பார்த்துக்குங்க... ஒரு மணி நேரத்துல வந்துடுவோம்.''

''சரிங்கய்யா...''

காரின் முன் சீட்டில் உட்கார்ந்திருந்த வெரோனிகா, "போன்ல யார் கெங்காதர்?" என்று கேட்டாள்.

"அம்மா..." - ஒற்றை வார்த்தையில் பதிலைச் சொல்லி விட்டு, காருக்குள் தாவி ஏறி உட்கார்ந்து இக்னிஷனை உசுப்பி காரை நகர்த்தினான்.

நிமிஷ நேரத்தில் ரோடுக்கு வந்து - ஊட்டியின் ஏற்றச் சரிவுகளில் ஊஞ்சலாடி, தொட்டபெட்டா போகும் ரோடைப் பிடித்து வேகமாய்ப் போனான் கங்காதரன்.

"போன்ல அம்மா என்ன பேசினாங்க?" - வெரோனிகா மெல்லக் கேட்டாள்.

"என்னிக்கு கோயமுத்தூர் வர்றீங்கன்னு கேட்டாங்க."

"நீங்க என்ன சொன்னீங்க?"

"வெரோனிகாவுக்கு-இந்த ஊட்டி என்னிக்குப் புளிக்குதோ அன்னிக்கு வர்றதா சொன்னேன். அம்மா சிரிச்சாங்க..."

"கெங்காதர்...!"

"உம்..."

"இந்த ஊட்டி போதும்... எனக்குப் புளிச்சுடுச்சு..."

"அட நிஜமாவா?"

"நிஜமாத்தான்... ரெண்டு நாளைக்கு முன்னாடி பொட்டானிகல் கார்டன்ல நடந்த அந்த இன்சிடெண்ட்டுக்குப் பின்னாடி எனக்கு இந்த ஊரைப் பார்த்தாலே எரிச்சலாயிருக்கு..."

"அந்த ரெளடிகளைப் பார்த்துப் பயந்துட்டியா? எந்த ஊருக்குப் போனாலும் அந்த ரகத்துல நாலஞ்சு பேர் இருப்பாங்க..."

"இல்ல கெங்காதர்... நாளைக்கு நாம கோயமுத்தூர் போயிடலாம். அந்த ரோக்ஸ் மறுபடியும் நம்மகிட்ட வாலாட்டினாலும் ஆட்டுவாங்க."

"அப்படி வாலாட்டினா ஒட்ட நறுக்கத்தான் இந்த ரிவால்வரைக் கொண்டு வந்திருக்கேன் வெரோனிகா. லைசென்ஸ் இருக்கு".

"நீங்க என்ன சொன்னாலும் சரி கெங்காதர். நாளைக்கு நாம ரெண்டு பேரும் கோயமுத்தூர்



போறோம்... மனசுக்குள்ளே ஒரு திகிலை வெச்சுக்கிட்டு இந்த ஊட்டியை என்ஜாய் பண்ண என்னால முடியாது."

"சரி... நாளைக்கு நாம கோயமுத்தூர் போறோம். போதுமா?"

படு ஏற்றமான மேட்டில் கார் சிரமமாய் ஒம்பிக் கொண்டு ஏறிக் கொண்டிருக்க, குளிர் காற்று ஐஸ் மாதிரி கன்னங்களை ஸ்பரிசித்தது. மேகப் பஞ்சுகள் ரோடில் உட்கார்ந்திருந்தன. தூரத்தில் தொட்டபெட்டா மேகங்கள் சூழப்பட்டு வெள்ளை முண்டாசு கட்டின மாதிரி தெரிய - வெரோனிகா கவலையை மறந்து அதிசயித்தாள்.

"ப்யூட்டிஃபுல்" என்றாள்.

"சிகரத்துக்குப் போயிட்டா இன்னும் பிரமிச்சுப் போயிடுவே வெரோனிகா. நீலகிரிக்கு வர்ற எந்த மேகமானாலும் சரி, இந்த தொட்டபெட்டா முனையில கொஞ்ச நேரம் உட்கார்ந்து ரெஸ்ட் எடுக்காமே போகாது. மேகத்தைக் கையில பிடிச்சு ஊதலாம்."

வெரோனிகா காரின் முன்புறக் கண்ணாடி வழியே தெரியும் அந்த சிகரத்தையே பார்த்துக் கொண்டிருக்க, கார் கிலோ மீட்டர்களை விழுங்கிக் கொண்டு மேலேறியது.

## 8

செர்ரி ரோட் கிராஸ் பக்கத்திலிருந்த அந்த மட்டமான ரெஸ்டாரண்டின் அரையிருட்டான அறைக்குள் உட்கார்ந்து, பீர் பாட்டிலைச் சப்பிக் கொண்டிருந்த ஜோ, தன் காதில் வந்து கிசுகிசுத்த சகாவை எரிச்சலாய்ப் பார்த்தான்.

"என்னடா சொல்றே? கொஞ்சம் பலமாத்தான் சொல்லேன்."

"ஜோ! அந்த ஜோடி கார்ல எங்கேயோ போயிட்டிருக்காங்க."

"யார், அந்த கங்காதரனும், வெள்ளைச்சியுமா?"

"ஆமா."

''எந்தப் பக்கமாப் போனாங்க?''

''தொட்டபெட்டா ரோட்ல...''

''அவங்கதானா? இல்லே வேற யாராவதுமா?''

''அவங்கதான் ஜோ. நல்லாப் பார்த்தேன்.''

ஜோ பீர் பாட்டிலைச் சாய்த்து முழு மூச்சாய் அதைக் குடித்துவிட்டு காலி பாட்டிலை டேபிளுக்குக் கீழே உருட்டி விட்டு எழுந்தான்.

''டேய்... குமாரு...!'' - டேபிளுக்கு மறுபக்கம் உட்கார்ந்து சிக்கன் பீஸை மென்று கொண்டிருந்தவனைக் கூப்பிட்டான் ஜோ.

''என்ன ஜோ...?''

''இன்னிக்கு அவங்களைக் கவனிச்சட லாமா...? தொட்டபெட்டா போயிட்டிருக் காங்களாம். நமக்குத் தோதான இடம்... காரியத்த முடிச்ச கையோட கோயமுத்தூர் போய் சுந்தரமூர்த்தி கிட்ட விஷயத்தைச் சொல்லிப் பேசின பணத்தை வாங்கிக்கிட்டு பெங்களூர் பக்கமாப் போயிடலாம்.''

''சரி... ஜோ...'' - அவனும் எழுந்தான்.

கௌண்ட்டரில் பணத்தை வீசிவிட்டு, குச்சியால் பல்லைக் குத்திக்கொண்டே வெளியே வந்து, நிறுத்தியிருந்த இரண்டு பைக்குகளில் நான்கு பேரும் ஏறிக் கொண்டார்கள்.

தொட்டா பெட்டாவை நோக்கி பைக்கை உதைத்தார்கள்.

நிறைய மேகங்கள் விலகிப்போய்விட, கங்காதரனும், வெரோனிகாவும் போய்ச் சேர்ந்த போது சிகரம் நிர்வாணமாய்த் தெரிந்தது.

தொலைவில் ஊட்டி சின்னதாய்ச் சிதறியிருந்தது.

இங்க் பாட்டிலைக் கவிழ்த்த மாதிரி நான்கைந்து ஏரிகள் நீலமாய் நீளவாக்கில் ஓடியிருந்தன. யூக்கலிப்டஸ் மரங்கள் கொத்துக் கொத்தாய் மலைச் சரிவுகளில் சீராய் நடப்பட்டிருக்க சேரன் பஸ்கள் பச்சைத் திற்றலாய் மலைப் பாதையில் தெரிந்தன.

''லவ்லி'' என்றாள் வெரோனிகா.

குளிர் உறைக்க - மார்பின் குறுக்கே கைகளால்



பெருக்கல் குறி போட்டாள்.

''அந்தப் பக்கம் பாரேன் வெரோனிகா.'' கங்காதரன் கிழக்குப் பக்கமாய்க் கையைக் காட்ட அடர்த்தியான பச்சைப் பெயின்டில் கோடு இழுத்த மாதிரி தேயிலை வரிசைகள் அநேகம் தெரிந்தன.

''கெங்காதர், நான் இப்படி நிக்கறேன். அந்த பிளான்டேஷன் வர்ற மாதிரி உங்க கையில இருக்கிற காமிராவில் ஸ்நேப் பண்ணுங்க.''

''ம்... நில்லு! இப்ப வெய்யிலும் அடிக்குது!'' - கங்காதரன் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து காமிராவில் கோணம் பார்க்க, வெரோனிகா தன் பாப் முடியைக் கோதிக் கொண்டு கம்பிக்குச் சாய்ந்து நின்றாள்.

''அப்படியே நில்லு... போஸ் அமர்க்களமாய் இருக்கு.''

காமிராவின் கண்ணில் கண்ணைப் பதித்து 'க்ளிக்' செய்தான் கங்காதரன். போஸ் கலைந்து அவனிடம் ஓடி வந்த வெரோனிகா, காமிராவைப் பறித்து, ''நான் உங்களை அதே போஸ்ல ஸ்நேப் பண்றேன். போய் நில்லுங்க'' என்றாள்.

கங்காதரன் கம்பி அருகே போனான்.

வெரோனிகா கோணம் பார்த்தாள்.

''வயித்தைத் தள்ளிக்கிட்டு நிக்காதீங்க. ஸ்மைல் பண்ணுங்க. ம்... அப்படித்தான்... தட்ஸ் குட்.... ஃபைன்... கிளிக் பண்றேன்... டோன்ட் மூவ்.''

'ப்ளக்' என்றது காமிரா.

வெள்ளைச் சல்லாத் துணியாய் மேகத் துணுக்கொன்று வெரோனிகாவின் முகத்தைத் தடவிவிட்டுப்போக - அதற்குப் பின்னால் வந்த ஒரு பெரிய மேகம் அவளை முழுசுமாய் ஒற்றி எடுத்தது.

''போலாமா வெரோனிகா?''

''இப்பவேவா?''

''ம்.''

''வந்து கொஞ்ச நேரந்தானே ஆச்சு!''

''இன்னும் கொஞ்ச நேரம் போனா குளிர ஆரம்பிச்சுடும். இப்பவே காத்து ஐஸ் மாதிரி அடிக்குது. இன்னும் கொஞ்ச நேரம் போனா

விறைச்சுடுவோம். பாத்தியா, நமக்குப் பின்னாடி வந்தவங்க கூட இறங்க ஆரம்பிச்சுட்டாங்க."

"ஒரு பத்து நிமிஷம் இப்படி உட்கார்ந்து - கொண்டு வந்திருக்கிற அயிட்டத்தை சாப்பிட்டு காப்பியைக் குடிச்சிட்டுப் போயிடுவோமே?"

"ம்.... உட்கார்." - லேசாய் சரம் பெய்திருந்த தரையில் கர்ச்சிப்பைப் போட்டு உட்கார்ந்தான் கங்காதரன். வெரோனிகா அவனோடு ஒட்டி உட்கார்ந்து வலைக் கூடையை இழுத்து அதிலிருந்த டவலை விரித்து, கொண்டு வந்ததைப் பரப்பினாள்.

சிகரத்தில் கூட்டம் சொற்பமாய் இருந்தது. மைசூர் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதை இரண்டு பேர் கன்னடத்தில் காரசாரமாக சம்பாஷிக்க, கல்யாணம் முடிந்த கையோடு வந்துவிட்ட ஜோடி பேச்சுக்குப் பேச்சு சிரித்துக் கொண்டிருந்தது. கையில் வர்ண வர்ணமாய் லாட்டரி சீட்டுகளை பிடித்துக் கட்டைக் குரலில், **"தமிழ் நாட்டின் உச்சாணிக் கொம்பில் நின்றிருப்போரே! இதுவே உங்களுடைய அதிர்ஷ்ட நாளாய் இருக்கலாம். நாளைக்குக் குலுக்கப் போற விஜயலட்சுமி ஒன்னேகால் கோடி பரிசுச் சீட்டு ஒரே ரூபாய். வாங்குங்க"** என்று கேஸட் மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான் ஒருவன். "ஏண்டா, எவரெஸ்ட்டுக்குப் போனாலும் ஆளை விட மாட்டீங்களாடா... லாட்டரிச்சீட்டை எங்கே தான் விக்கறதுன்னு ஒரு வரைமுறையில்லையா?" - ஒருவர் லாட்டரி சீட்டு விற்பவனைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தார்.

கேக்கை மென்று காப்பியைக் குடித்த கங்காதரன் எழுந்தான்.

"போலாம் வெரோனிகா."

"உம்."

வலைக்கூடையில் எல்லாவற்றையும் திணித்துக் கொண்டே வெரோனிகாவும் எழுந்தாள். கங்காதரனின் கையைப் பற்றிக் கொண்டு இறங்க ஆரம்பித்தாள். குளிர் ஊசி முனையின் பதத்துக்குக் கூர் தீட்டிக் கொண்டிருந்தது.

நிறுத்தியிருந்த காருக்கு வந்தார்கள்.



முன்சீட்டில் உட்கார்ந்த வெரோனிகா திடீரென்று கையை உதறி, "ஸைமகுட்னஸ்" என்றாள்.

டிரைவிங் சீட்டில் உட்காரப் போன கங்காதரன், "என்ன வெரோனிகா?" என்றான்.

"கா...மி...ரா" - சொல்லத் திணறினாள்.

"காமிரா?"

"நாம உட்கார்ந்து சாப்பிட்ட இடத்துல... கம்பிக்குப் பக்கத்திலிருந்த திட்டு மேல வெச்சிருந்தேன். எடுத்துக் கூடையில போட மறந்துட்டேன்."

"போச்சுடா!" - காரை விட்டு இறங்கினான் கங்காதரன்.

"எடுத்துட்டு வரப் போறீங்களா கெங்காதர்?"

"பின்னே?"

"நானும் வரவா...?"

"எதுக்கு... தண்டத்துக்கு ஒரு நடை? - நானே போய் எடுத்துட்டு வந்துடறேன். யாராவது எடுத்து வைச்சிருப்பாங்க." - வேக வேகமாய் மேலே போனான் கங்காதரன்.

சாம்பிராணிப் புகை மாதிரி மேகங்கள் குவிய ஆரம்பித்திருந்தன.

மூச்சிரைக்க நடந்து சிகரத்துக்கு வந்தான்.

"அதோ... ஸாரே வந்துட்டாரு!" - லாட்டரிச் சீட்டு விற்கிற அந்த ஆள் பக்கத்தில் நின்றிருந்த ஒருவரிடம் சொல்லி விட்டு கையில் காமிராவோடு கங்காதரனை நோக்கி வந்தான். "என்ன ஸார்... காமிரா வேண்டாமா? திருப்பதி கோயில்ல நகையைப் போடற மாதிரி தொட்டபெட்டாவில் காமிராவைப் போட்டுட்டுப் போயிட்டீங்களே! எங்கண்ணுல படங்காட்டி உங்க பொருளு உங்களுக்குத் திரும்பி வருது. இந்தா ஸார்."

"ரொம்ப தேங்க்ஸ்..."

"வெறும் தேங்ஸ் சொன்னா எப்படி ஸார்? விஜயலட்சுமில ரெண்டு சீட்டு வாங்கிக்கிங்க ஸார்." - சீட்டை நீட்டினான் அந்த ஆள்.

கங்காதரன் சிரித்து, பணத்தைக் கொடுத்து இரண்டு சீட்டை வாங்கிக் கொண்டு திரும்பவும் இறங்க ஆரம்பித்தான். மேகங்கள் வழியை

மொய்த்திருக்க, கொஞ்சம் சிரமமாய்க் கால் பாவி நடந்தான்.

பௌடர் தூவுகிற சைஸில் பனி லேசாய்ப் பெய்ய - குளிர் உக்கிரமாய் உறைத்தது.

"டப்... டப்..."

வேகவேகமாய் இறங்கி காரை நோக்கிப் போனான்.

நகர்ந்து கொண்டிருக்கிற மேகப் பொதிகளுக்கு மத்தியில், காரும், காரில் உட்கார்ந்திருந்த வெரோனிகாவும் கண்ணில் பட்டார்கள்.

காரைச் சமீபித்தான்.

கதவைத் திறந்து காரில் உட்கார்ந்து -
கையிலிருந்த காமிராவை அருகே உட்கார்ந்திருந்த வெரோனிகாவின் மடியில் போட்டான். "வெரோனிகா!" கூப்பிட்டு சிரித்தான்.
சொன்னான்.

"இந்த காமிரா நம்ம நியாயமான சொத்து. அதான் அந்த லாட்டரி சீட்டு விற்கிற ஆள் கவனமா எடுத்து வெச்சிருந்து குடுத்தான்."

"............"

"அவனுக்கு வெறும் தேங்ஸ் போதாதாம். ரெண்டு லாட்டரி சீட்டு வாங்கிக்கச் சொன்னான். வாங்கிக்கிட்டேன். ஒன்ணே கால் கோடி லாட்டரி சீட்டு இந்தா..."

கங்காதரன் எடுத்து நீட்டிய அந்த வர்ணச் சீட்டுகளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் முன்புறக் கண்ணாடி வழியே நேர்ப் பார்வை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் வெரோனிகா.

மௌனம்....

"வாட் ஈஸ் ராங் வித் யூ...? ஏன் பேசாம... என்னமோ மாதிரி இருக்கே?"

அதே மௌனம். அதே வெறித்த பார்வை.

"வெரோனிகா!" - பதட்டமாய்க் கத்தி அவளுடைய தோளைப் பிடித்து உசுப்பினான் கங்காதரன். அடுத்த விநாடி -

வெரோனிகா ஸ்லோமோஷனில் முன்நோக்கிச் சரிந்து - கண்ணாடியில் தலை மோதிக் கவிழ்ந்தாள்.

முதுகில் -



அந்தக் கத்தியின் பிடி தெரிந்தது.

கூடவே

செவேலென்ற ரத்தம்...

## 9

நீலகிரி போலீஸ் தொட்டபெட்டாவின் குளிரைப் பொருட்படுத்தாமல் வெரோனிகாவை போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப்ப, அந்தச் சாயந்தர வேளையில் கறுகறுவென்று இயங்கிக் கொண்டிருந்தது.

காரைச் சுற்றிலும் சாக்பீஸால் கோடு இழுத்து - வெரோனிகாவைக் கீழே இறக்கி மல்லாக்கப் போட்டிருந்தார்கள். ரத்தம் எப்போதோ உறைந்து கருஞ்சிவப்பு நிறத்துக்கு வந்துவிட்டிருந்தது. உயிரை விட்டபோது லேசாகப் பிரிந்த வாயில் ஒழுங்கான பல்வரிசை தெரிய, கடைவாயோரம் ஈ ஒன்று உட்கார்ந்திருந்தது. போட்டிருந்த மேக்ஸி டிரஸ் பூராவும் ரோஜா இதழ்களை உதிர்த்த மாதிரி ரத்தத் தெளிசல்கள்.

கங்காதரன் இருண்டு போயிருந்தான்.

இரண்டு தடவை மயக்க நிலைக்குப் போய்விட்டுத் திரும்பியிருந்தான்.

இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் குளிர் காற்று பட்டுப் பட்டு ப்ளம்ஸ் பழங்களாய்ச் சிவந்து போயிருந்த தன்னுடைய கன்னக் கதுப்புகளைத் தடவிக் கொண்டே கங்காதரனைப் பார்த்தார்.

"மிஸ்டர் கங்காதரன்..."

கங்காதரன் கண்ணீரோடு, "எஸ்" என்றான். குரல் சிதறியிருந்தது.

"நீங்க கோயமுத்தூரிலிருந்து எப்போ ஊட்டி வந்ததா சொன்னீங்க...?"

"போன வாரம்."

"தொட்டபெட்டாவுக்கு இதுக்கு முன்னாடி நீங்க ரெண்டு பேரும் வந்திருக்கீங்களா?"

"நான் நிறையத் தடவை வந்திருக்கேன். ஆனா வெரோனிகா வர்றது இதுதான் முதல் தடவை. கடைசித் தடவையாவும் ஆயிடுச்சு."

விட்டால் அவன் அழ ஆரம்பித்து விடுவான்

என்கிற பயத்தில் அடுத்த கேள்வியை உடனே போட்டார் இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன்.

''மிஸ்டர் கங்காதரன்! நீங்க காமிரா எடுக்கிறதுக்காக மேலே போனப்ப உங்க காருக்குப் பக்கத்துல யாராவது சந்தேகப்படும்படியா நின்னுட்டிருந்தாங்களா?''

''நான் யாரையும் பார்க்கலை...''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி பொட்டானிகல் கார்டன்ல வெச்சு உங்க ஒய்ஃப் விஷயமா உங்களுக்கும் சில ரௌடீஸுக்கும் க்ளாஷ் ஆனதா சொன்னீங்க. அவங்க யார்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''மறுபடியும் பார்த்தா அடையாளம் கண்டுபிடிச்சுடுவீங்களா?''

''ம்...''

''அவங்க எப்படி இருந்தாங்கன்னு ஏதாவது ரிமார்க்கபிள் ஐடென்டிபிகேஷன் சொல்ல முடியுமா?''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்... எனக்கு ஞாபகமில்லை.''

கங்காதரனை அதற்கு மேலும் கசக்கப் பிரியப்படாத நஞ்சய்யன் மெதுவாய் அவனை விட்டு நகர்ந்து வெரோனிகாவிடம் வந்தார். போட்டோகிராபரும், ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எடுப்பவரும் அவள் அருகே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

''எனி க்ளு?'' - அவர்களை விசாரித்தார் இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன்.

''நத்திங் ஸார்.''

''ரேப் அட்டெம்ப்ட்?''

''அப்படித் தெரியலை ஸார்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''உடம்புல கீறல் இல்லை. போட்டிருக்கிற டிரஸ்ல கிழிசல் இல்லை.''

''பி.எம். ரிப்போர்ட்ல எல்லாமே வந்துரும்!'' - சொல்லிக் கொண்டே காரை நோக்கிப் போனார் நஞ்சய்யன். கதவுப் பிடியைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தார்.



முன்னால் இருந்த ரெக்ஸின் சீட்டில் ரத்தம் உறையாமல் பிசுபிசுப்போடு தெரிந்தது. காரிலிருந்த காற்று கெட்டிருந்தது. முகம் சுளித்துக் கதவை மூடப்போனவரின் பார்வையில் - சட்டென்று அந்த பால்பாயிண்ட் பேனா தெரிந்தது.

சீட்டுக்குக் கீழே ஒரு ஓரமாய் உருண்டு கிடந்தது. எடுத்தார் நஞ்சய்யன்.

தந்தத்தால் ஆன பால்பாயிண்ட் பேனா. ரொம்பவும் உயர்தரம்.

அதன் உடம்பில் பொடிசாய் ஆங்கில எழுத்துக்கள் தங்க நிறத்தில் தகதகத்தன. பார்வையை உன்னிப்பாக்கி படித்தார் நஞ்சய்யன்.

P.V.PRODUCTS.

குமிழை அழுத்தினார். மெலிசாய் ரீஃபில் வந்தது.

பேனாவோடு கங்காதரனை நோக்கி நடந்தார்.

ரோடோரப் பாறையொன்றில் உட்கார்ந்து கர்ச்சிப்பால் கண்களை ஒற்றிக் கொண்டிருந்த கங்காதரன் இன்ஸ்பெக்டரைப் பார்த்து நிமிர்ந்தான். அவர் பேனாவை நீட்டினார்.

''இந்தப்பேனா உங்களோடதா மிஸ்டர் கங்காதரன்?''

பார்த்துவிட்டு 'இல்லை' என்பது போல் தலையசைத்தான் கங்காதரன்.

''உங்க ஒய்ப் இந்தப் பேனாவை வெச்சிருந்தாங்களா?''

''இல்லை.''

''இந்தப் பேனா உடம்புல 'ஆர்.வி.ப்ராடக்ட்ஸ்'னு எழுதியிருக்கு. யார் அந்த ஆர்.வி? உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது இன்ஸ்பெக்டர்.''

''யோசிச்சுப் பாருங்க மிஸ்டர் கங்காதரன். உங்க பிசினஸ் சம்பந்தப்பட்டவங்க யாராவது ஆர்.வி.ப்ராடக்ட்ஸ் பேர்ல ஏதாவது கம்பெனி நடத்தறாங்களா?''

''இல்லை... இன்ஸ்பெக்டர்.''

''அவசரப்படாதீங்க. யோசிச்சுச் சொல்லுங்க.''

திடீரென்று வெறி பிடித்தவன் போல் கத்தினான்

கங்காதரன். ''ஐ கான்ட்.... இன்ஸ்பெக்டர்! என்னால எதையுமே யோசிக்க முடியாது. என்னோட வெரோனிகோ செத்துப் போயிட்டாங்கிற நினைப்பே இருதயத்துல அக்னியா எரியுது. ப்ளீஸ் லீவ் மீ அலோன்... லீவ் மீ அலோன்.''

''ஓ.கே. மிஸ்டர் கங்காதரன். அப்புறமா இதைப்பத்திப் பேசுவோம். கோயமுத்தூர்ல இருக்கிற உங்க மதர், பிரதர்க்கு மெஸேஜ் கன்வே பண்ணி இங்கே வரச் சொல்லிடுங்க. பாடி நாளைக்குக் காலையில் போஸ்ட் மார்ட்டம் முடிஞ்ச பின்னாடி கிடைக்கும்.''

கண்களில் நீர் தெறிக்க -

தலையசைத்தான் கங்காதரன்.

## 10

தகவல் கிடைத்து, காரை விரட்டிக் கொண்டு பாகீரதியும் மோகன கிருஷ்ணனும் ஊட்டியைத் தொட்ட போது - ராத்திரி மணி 9.05. பெய்த பனியில் ஊட்டியே ஈரமாகிச் சொத சொதத்தது. கம்பளிக் குவியல்களினூடே ஜனங்கள் மெல்ல நடை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆஸ்பத்திரிக்குள் கார் நுழைந்து நின்றதுமே - உடைந்த குரலில் அதிக பட்ச அழுகையோடு கங்காதரனை நோக்கி ஓடினாள் பாகீரதி. பின்னாலேயே மோகன கிருஷ்ணன் தவிப்பாய் நடந்து வந்தான்.

''கங்காதரா... என்னடா ஆச்சு அவளுக்கு?''

ஆஸ்பத்திரிப் படியேறிக் கதறிக் கொண்டே வந்த பாகீரதியை அழுது விசும்பிக் கொண்டே தாங்கிப் பிடித்தான் கங்காதரன்.

''அம்?..மா...''

அருகே நின்றிருந்த இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் கங்காதரனிடம் மெல்லிய குரலில் கேட்டார். ''மிஸ்டர் கங்காதரன்! இவங்கதான் உங்க சித்தியா...?''



அழுது கொண்டே தலையசைத்தான் கங்காதரன்.

''இவரு...?'' - மோகனகிருஷ்ணனைக் காட்டினார்.

''தம்பி...''

''பேரு...''

''மோகன கிருஷ்ணன்...''

''கங்காதரன்! அவங்க பாடியைப் பார்க்கப் பிரியப்பட்டா உடனடியாக நாம மார்ச்சுவரிக்குப் போகணும்... லேட்டாப் போனா 'அலவ்' பண்ண மாட்டாங்க...''

''போகலாம் இன்ஸ்பெக்டர்...''

பாகீரதி தன்னிச்சையாய் ஏதேதோ புலம்பிக் கொண்டே வர, மோகன கிருஷ்ணன் அவளைக் கைத்தாங்கலாய்ப் பற்றிக் கொண்டு நடந்தான். வார்டுகளில் படுத்திருந்த நோயாளிகள் கட்டிலிலிருந்தும் எழுந்து உட்கார்ந்து வேடிக்கை பார்த்தார்கள்.

''இன்ஸ்பெக்டர்!'' - மோகன கிருஷ்ணன் நடந்து கொண்டே கூப்பிட்டான்.

''எஸ்...'' - திரும்பினார் நஞ்சய்யன்.

''குத்தினவனைப் பிடிச்சுட்டீங்களா இன்ஸ்பெக்டர்?''

''இன்னும் இல்லை... ஆனா பிடிச்சுடுவோம்! மோகன கிருஷ்ணன், வெரோனிகா கொலை சம்பந்தமா நீங்க யார் மேலாவது சந்தேகப்படறீங்களா?''

''எனக்கு எதுவுமே சொல்லத் தோணலை இன்ஸ்பெக்டர். வெரோனிகா வெளி தேசத்துப் பொண்ணு.... அவளுக்கு இங்கே யாரும் விரோதிங்க இருக்க முடியாது...''

மார்ச்சுவரி அறையை நெருங்கினார்கள்.

பார்மலின் நாற்றம் 'வாங்க... வாங்க...' என்றது. கனமான ஸ்வெட்டர் அணிந்திருந்த தோட்டி பவ்யமாய்க் கதவைத் திறந்து விட்டான்.

உள்ளே போனார்கள்.

நீண்ட தகரப் பலகைகள் வரிசையாய்த் தெரிய -

வெள்ளை விரிப்புகளால் போர்த்தப்பட்ட
உடல்கள் பேரேட் நடத்தின. பாகீரதி பெரிதாக அழ
முற்பட்டுச் சேலைத் தலைப்பால் வாயைப்
பொத்திக் கொண்டாள்.

பின்னாலேயே வந்த அந்தத் தோட்டி. "அந்த
வெள்ளைக்காரப் பொண்ணு பொணமா...?"
என்று கேட்டு-சுவரோரமாய் இருந்த தகரப்
பலகையை நெருங்கி வெள்ளை விரிப்பை
எடுத்துவிட-

வெரோனிகா கொஞ்சம் கோரமாய்த்
தெரிந்தாள்.

போஸ்ட்மார்ட்டத்திற்காக உடைக்கப்பட்ட
மண்டையின் பிளவை பாண்டேஜ் துணியால்
இறுகக் கட்டியிருந்தார்கள். வயிற்றை அறுத்துக்
குடல் சமாச்சாரங்களை அகற்றிவிட்டுப் பஞ்சு
பத்தையைத் திணித்து 'காமா சோமா' என்று
தையல் போட்டிருந்தார்கள்.

அப்படியே
பாகீரதி கேவல்களோடு
மண்டியிட்டு உட்கார்ந்து - வெரோனிகாவின்
இறுகிப் போன முகத்தைத் தடவினாள். "இப்படி
அறுபட்டுப் பொண ரூம்ல' கெடக்கவா எம்
பையனைக் கட்டிக்கிட்டே அம்மா வெரோனிகா!"

கங்காதரன் ஒரு தூண் மாதிரி நின்றான்.

மோகன கிருஷ்ணன் மார்புக்குக் குறுக்கே
கைகளை கட்டிக் கொண்டு வெரோனிகாவையே
வெறித்தான். இன்ஸ்பெக்டர் அவனுடைய
தோளைத் தொட்டார்.

"மோகன கிருஷ்ணன்! ஒரு நிமிஷம் என்கூட
வெளியே வர்றீங்களா?"

"வர்றேன் இன்ஸ்பெக்டர்".

அவரோடு வெளியே வந்தான்.

"உங்க பிரதர் கங்காதரன் ரொம்பவும் 'ஃபெட்
அப்' ஆயிட்டார். எந்தக் கேள்விக்கும் அவராலே
பதில் சொல்ல முடியலை மோகன கிருஷ்ணன்!
அதான் உங்களைக் கூப்பிட்டேன்".

"கேளுங்க இன்ஸ்பெக்டர்... நான்
சொல்றேன்."



இன்ஸ்பெக்டர் தஞ்சய்யன் ஆஸ்பத்திரி
வராந்தாவில் நடந்து கொண்டே, சிகரெட்
டொன்றை உருவி உதட்டில் பொருத்திக்
கொண்டார். லைட்டரில் அதன் தலையைத் தேய்த்து
மெலிதாய்ப் புகைவிட்டபடி கேட்டார்.

"கங்காதரன்-வெரோனிகா கல்யாணம் திடீர்
கல்யாணம் தானே?"

"ஆமா இன்ஸ்பெக்டர். யாருமே எதிர்பார்க்காத
கல்யாணம். கொஞ்ச நேரம் அதிர்ச்சியா இருந்தது-
அப்புறம் சரியாயிடுச்சு."

"இந்தக் கல்யாணத்தை ரொம்பவும் தீவிரமா
எதிர்த்தவங்க யாராவது இருக்காங்களா மோகன
கிருஷ்ணன்? உறவிலேயும் சரி...
நண்பர்களிலேயும் சரி?"

மோகன கிருஷ்ணன் சில விநாடிகள் யோசித்து
விட்டுத் தயக்கமாய்ச் சொன்னான். "இந்தக்
கல்யாணத்தாலே நிரம்பவும் அப்செட் ஆனவர்
மாமா சுந்தரமூர்த்திதான் இன்ஸ்பெக்டர்."

"மாமான்னா?"

"அம்மாவோட அண்ணன். அவரோட மகளை
கங்காதரனுக்குக் கட்டி வைக்க - ஆசையாக்
காத்திட்டிருந்தார். கங்காதரன் இப்படி ஒரு
பொண்ணைக் கூட்டிட்டு வந்ததும் கொதிச்சுப்
போயிட்டார். கண்டபடி சத்தம் போட
ஆரம்பிச்சார்."

"சலிட்?" மோவாயைத் தேய்த்தார்
இன்ஸ்பெக்டர். பிறகு தன் சட்டைப் பாக்கெட்டி
லிருந்து அந்த பால்பாயிண்ட் பேனாவை எடுத்து
மோகன கிருஷ்ணனிடம் நீட்டினார்.

"இந்தப் பேனா கார்ல இருந்தது மோகன
கிருஷ்ணன். ரொம்பவும் உயர்தரமான பேனா.
ஐவரி மேட். பேனாவோட உடம்புல
**ஆர்.வி.ப்ராடக்ட்ஸ்னு** போட்டிருக்கு. யார் இந்த
ஆர்.வி.பிராடக்ட்ஸ்? உங்களுக்குத் தெரியுமா?"

பேனாவை வாங்கிப் பார்த்தான் மோகன
கிருஷ்ணன். அதைப் புரட்டிப் பார்த்துவிட்டு
உதட்டைப் பிதுக்கினான். "தெரியலை

இன்ஸ்பெக்டர்.''

''இந்தப் பேனா கங்காதரனோடதுமில்லை. வெரோனிகாகிட்டேயும் இந்தப் பேனா கிடையாது. ஆனா பேனா கார்ல கெடப்பாடிக்கிட்டே கிடந்திருக்கு. கொலையாளி அதைத் தவற விட்டுட்டுப் போயிருக்கலாம். இந்தக் கொலைக் கேஸ்ல கிடைச்சிருக்கிற முதல் தடயம் இதுதான்.''

''இதை வெச்சு நீங்க எப்படி, கொலையாளியைக் கண்டுபிடிக்கப் போறீங்க இன்ஸ்பெக்டர்? ஆர்.வி.ப்ராடக்ட்ஸ் ஒரு கம்பெனியாக இருக்கலாம். தன்னோட கஸ்டமர்களுக்குத் தர்றதுக்காக காம்ப்ளிமெண்ட்ஸா இந்தப் பேனாக்களைத் தயாரிச்சிருக்கலாம். நூத்துக் கணக்கான பேருக்கு இந்தப் பேனாக்களை காம்ப்ளிமெண்ட்ஸா குடுத்திருக்கலாம். நீங்க இந்தக் கம்பெனியைக் கண்டுபிடிச்சு... அவங்க யார் யாருக்கு இந்தப் பேனாவைக் குடுத்திருக்காங்கன்னு லிஸ்ட்டை வெச்சுக்கிட்டு - ஒவ்வொருத்தரையா விசாரிக்கப் போறீங்களா இன்ஸ்பெக்டர்?''

''ஆமா...''

''சிரமந்தான்... இன்ஸ்பெக்டர்...''

''சிரமந்தான்... ஆனா வேற வழியில்லை...''

பேசப் பேச மார்ச்சுவரி இன்ஸ்பெக்டர் அறையிலிருந்து கங்காதரன் எட்டிப் பார்த்தான். பதட்டமாய்க் கத்தினான்.

''மோகன்...''

''என்னண்ணா?''

''அம்மா மயக்கம் போட்டுட்டாங்க... டாக்டர் யாரையாவது காண்டாக்ட் பண்ணி உடனே கூட்டிட்டு வா...''

மோகனகிருஷ்ணன் ஆஸ்பத்திரியின் முன் பக்க அறைக்கு ஓடினான். இன்ஸ்பெக்டர் கையிலிருந்த சிகரெட்டை எறிந்து விட்டு மார்ச்சுவரியை நோக்கி அவசர நடை நடந்தார்.

# 11

ஹீட்டருக்கு அருகில் உட்கார்ந்து, கை விரல்களை நீட்டி உஷ்ணத்தை வாங்கிக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி ஜோ சொன்னதைக் கேட்டு முகம் இருண்டு போய் எழுந்தார்.

''அந்தப் பொண்ணு செத்துட்டாளா?''

''ஆமாங்க...''

''எப்படி?''

''யாரோ கத்தியால குத்திக் கொன்னுட்டாங்க...''

''எங்கே வெச்சு?''

''தொட்டபெட்டாவில...''

''ஜோ...''

''என்னங்க?''

''உன்னோட சகாக்களில் யாரும் அந்தக் கொலையைச் செஞ்சுடலையே?''

''இல்லீங்க... நாங்க... அந்த கங்காதரனைத் தாக்கத்தான் தொட்டபெட்டா போனோம்... வர்ற வழியில மடக்கி அவனைச் சேதப்படுத்தலாம்ன்னு நினைச்சோம். அதுக்குள்ளே யாரோ முந்திக்கிட்டு அந்தப் பொண்ணைத் தீர்த்துட்டாங்க. பாடி மார்ச்சுவரி போயிருக்கு...''

''ஜோ... நீ ஒரு காரியம் பண்ணு!''

''என்னங்க?''

''நீயும் உன்னோட சகாக்களும் கோயமுத்தூர் போயிடுங்க. ஊட்டியில இருக்காதீங்க. அநாவசியமா உங்க மேல சந்தேகம் வரும். ஏற்கனவே உங்களுக்கும் அவங்களுக்கும் கார்டன்ல 'க்ளாஷ்' நடந்திருக்கு... அதைக் காரணமா வெச்சு போலீஸ் உங்க பக்கத்துல வரலாம்...''

''போயிடறோம் ஸார்...'' என்றவன் தயங்கினான். ''நீங்க சொன்ன வேலையை நாங்க செய்யாமே போனாலும் நிறையவே கஷ்டப் பட்டிருக்கோம். பேசின பணம்...''

''தர்றேன்! நாளைக்கு கோயமுத்தூர் வந்து தர்றேன்...''

''சரி ஸார்.''

ஜோ நகர்ந்தான்.

சுந்தரமூர்த்தி டெலிபோனை நோக்கி வேகமாய்ப் போனார். கங்காதரன் கெஸ்ட் ஹவுஸ் போன் நம்பரை மனசில் வாங்கிக் கொண்டு டயலைச் சுழற்றினார்.

மறுமுனையில் மோகன கிருஷ்ணன் கிடைத்தான்.

''மோகன்! கேள்விப்பட்ட நியூஸ் நிஜமா?''

''நிஜந்தான்... நீங்க ஊட்டிக்கு எப்ப வந்தீங்க மாமா?''

''ரெண்டு நாளாச்சு... அம்மா வந்திருக்காளா?''

''ம்...''

''பாடியை வீட்டுக்குக் கொண்டு வந்தாச்சா?''

''இன்னும் இல்ல மாமா... நாளைக்குத்தான் தருவாங்க...''

''சரி... நான் இப்போ அங்கே வர்றேன்...''

''ம்...''

ரிஸிவரை வைத்துவிட்டு, ஹோட்டல் அறையைப் பூட்டிக் கொண்டு மாடிப்படிகளில் இறங்கியபோது - சுந்தரமூர்த்தியின் மனசு பூராவும் சந்தோஷ அலைகள் எழும்பிக் கொண்டிருந்தன.

## 12

கங்காதரனின் கெஸ்ட் ஹவுஸ்.

வீட்டின் சூழ்நிலையைப் புரிந்து கொண்ட மாதிரி விளக்குகளும் சோபிதமில்லாமல் வெளிச்சத்தைப் பரப்பியிருக்க ஹாலின் நடுவே போடப்பட்டிருந்த சோபாக்களில் எல்லோருமே கவலையாய்ச் சாய்ந்திருந்தார்கள். இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் மட்டும் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

R. V. CHIT FUNDS...



R. V. CREATION...

R. V. TAILORS..

R.V.PRODUCTS ஐத் தேடினார். கிடைக்காமல் போகவே சோர்ந்து டைரக்டரியை மூடினார். அருகில் உட்கார்ந்திருந்த மோகன கிருஷ்ணன், ''கிடைச்சுதா இன்ஸ்பெக்டர்?'' என்று கேட்டான்.

''கிடைக்கலை'' - பெருமூச்சு விட்டார்.

''ஊட்டி போன் நம்பர்ஸை மட்டும் பார்த்தாப் போதாது இன்ஸ்பெக்டர். தரோவா எல்லா ஊர் டைரக்டரியையும் அலசணும்... பால்பாயிண்ட் பேனாவை 'ஐவரி'யில போட்டிருக்காங்க... கம்பெனி ரெப்யூட்டட் கம்பெனியா இருக்கணும்... இல்லேன்னா இவ்வளவு காஸ்ட்லியா காம்ப்ளிமெண்ட்ஸைப் போட முடியாது... கொஞ்சம் சிரமப்பட்டா கண்டு பிடிச்சுடலாம்...''

கங்காதரனும், பாகீரதியும் தத்தம் மோவாய்களைத் தாங்கிக் கொண்டு வெறித்த பார்வைகளோடு உட்கார்ந்திருந்தார்கள். ஹால் கடிகாரம் ஒன்பதரை மணியில் ஒரு ஒற்றையடி அடித்துவிட்டு விநாடிகளை எண்ண ஆரம்பித்திருந்தது.

''ஓ.கே... மிஸ்டர் மோகன கிருஷ்ணன். நான் புறப்படறேன்... ஸ்டேஷன்ல கொஞ்சம் வேலையிருக்கு... நாளைக்குக் கார்த்தாலே யாராவது ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வந்து பாடியை ரிஸீவ் பண்ணிக்கலாம். பிரதர்க்கும், மதர்க்கும் தைரியம் சொல்லுங்க...''

இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் புறப்பட எழுந்தார்.

அதே நேரம் -

டெலிபோன் கூப்பிட - ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...'' - குரல் கொடுத்தார்.

''மிஸ்டர் கங்காதரன் இருக்காரா?'' மறுமுனையில் ஒரு ஆண்குரல் கரகரத்தது.

''நீங்க யார் பேசறது?''

''நந்தகுமார்... அவரோட ஃப்ரெண்ட்...''

விரல்களால் ரிஸீவரின் வாயை மூடிக்கொண்டு, ''மிஸ்டர் கங்காதரன், உங்களுக்கு போன்...'' என்றார் இன்ஸ்பெக்டர்.

கங்காதரன் இன்னமும் அதே வெறித்த பார்வையோடு உட்கார்ந்திருந்தான்.

''கங்காதரன்...''

''...............''

''டேய்... கங்காதரா...'' - பாகீரதி அவனுடைய தோள் பட்டையைப் பிடித்து உலுப்ப, அந்த உலுப்பலைப் பொருட்படுத்தாமல் சோபாவின் பின்னுக்குச் சாய்ந்தான்.

இன்ஸ்பெக்டர் ரிஸீவரை மறுபடியும் தன் காதுக்குக் கொடுத்தார்.

''மிஸ்டர் நந்தகுமார்! கங்காதரன் ஹேஸ் கான் அவுட். எனிதிங் இம்பார்ட்டெண்ட்?''

''பெரிசா ஒண்ணுமில்லை. இன்னிக்கு காலையில அவர் தன்னோட கார்ல எனக்கு லிப்ட் குடுத்தார். கார்ல போய் ஃபேக்டரி வாசல்ல இறங்கி உள்ளே போனதும்தான் தெரிஞ்சுது. ஒரு பால்பாயிண்ட் பேனாவை கார்லேயே விட்டுட்டேன். ஜவரி மேட்... R.V. PRODUCTS காம்ப்ளிமெண்ட் அது. செண்ட்டிமெண்ட்டலா எனக்கு ஆகி வந்த பேனா அது.''

இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் நொறுங்கினார்.

நந்தகுமார் தொடர்ந்தார். ''ஒரு பேனாவுக்காக போன் செய்ய வேண்டாமேன்னு பார்த்தேன். பட் மனசு சமாதானமாகலை. அந்தப் பேனாவை அவர் எடுத்து வெச்சிருந்தா நாளைக்கு காலைல நானே வந்து வாங்கிக்கிறதா சொல்லுங்க. பை...த...பை நீங்க யார்ன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''போலீஸ்...''

''போலீஸ்?'' - மறுபக்கம் வியந்தார் நந்தகுமார்.

''உங்களுக்கு இன்னும் விஷயம் தெரியலைன்னு நினைக்கிறேன் மிஸ்டர் நந்தகுமார். ஸாரி டு ஸே திஸ்... கங்காதரனோட ஒய்ப் மிஸஸ் வெரோனிகா வாஸ் மர்டர்ட்...''



''ம...ம...மர்டர்?'' - நந்தகுமார் மறுமுனையில் ஏகப்பட்ட அதிர்ச்சியில் குழறினார். ''எ...எ...எப்போ... நடந்தது இன்ஸ்பெக்டர்?''

''ஆஃப்டர்நூன்.''

''ஓ...ஹாரிபிள்... நான் இப்போ அங்கே வர்றேன்.''

''வாங்க...''

ரிசீவரை வைத்தார் நஞ்சய்யன்.

பிடியில் இருந்த ஒரு தடயமும் அந்த நிமிஷம் சூன்யமானதில் மனசுக்குள் கனமாய் உணர்ந்து, கங்காதரனை நோக்கி நடந்தார். அவனை நெருங்கி உட்கார்ந்தார்.

''கங்காதரன்...''

''ம்...'' - அவர் பக்கமாய்த் திரும்பினான் கங்காதரன்.

''உங்க ஃப்ரெண்ட் நந்தகுமார் போன் பண்ணியிருந்தார்.''

''உம்...''

''இன்னிக்குக் காலைல உங்க கார்ல அவருக்கு லிப்ட் குடுத்தீங்களா?''

'ஆமாம்' என்பது போல் தலையசைத்தான்.

சட்டைப் பாக்கெட்டில் இருந்த பேனாவை உருவினார் நஞ்சய்யன். ''இந்தப் பேனா அவரோடதாம். காலையிலேயே கார்ல தவறவிட்டிருக்கார். இப்போ போன் பண்ணிக் கேட்டார்.''

''ம்...''

பேனாவை அருகிலிருந்த டீபாயின் மேல் வைத்துவிட்டு எழுந்தார் இன்ஸ்பெக்டர்.

மோகன கிருஷ்ணன் ஒரு திடுக்கிடலோடு எழுந்தான்.

''இன்ஸ்பெக்டர்!''

நஞ்சய்யன் புன்னகைத்தார். ''கேஸ் ரொம்ப தூரம் தள்ளிப் போயிடுச்சு மிஸ்டர் மோகன கிருஷ்ணன். இந்த கேஸ்ல இருந்த ஒரேயொரு பிடிப்பும் கை நழுவிப் போயிடுச்சு. மறுபடியும் ஆதியிலிருந்து வரணும். சின்னச் சின்ன

விஷயங்களைக் கூட அலசணும். இப்போ இந்தக் கேஸை மறந்துட்டு ஸ்டேஷனுக்குப் போறேன். நாளைக்கு அரிச்சுவடியிலிருந்து ஆரம்பிக்கிறேன். வரட்டுமா?''

நஞ்சய்யன் வாசலை நோக்கிப் போனார்.

ஜீப் பெரிதாய் உறுமிவிட்டு நகர்ந்தது.

''அம்மா'' - மோகனகிருஷ்ணன் கூப்பிட்டான்.

''ம்...'' - ஏறிட்டாள் பாகீரதி.

''மாமா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணியிருந்தார்...''

''ம்...''

''ரெண்டு நாளா ஊட்டியிலதான் இருக்காராம்...''

''ம்...''

''இப்போ இங்கே வர்றதா சொன்னார்...''

பாகீரதி திடீரென்று சிலிர்த்தாள்... ''டேய்... மோகன்! உன்னோட மாமன் வந்தா அப்படியே திரும்பிப் போகச் சொல்லு... உள்ளார வர விடாதே... அவனோட நச்சுப் பல்லுல பட்டு வந்த வார்த்தை பலிச்சிடுச்சு. எம்புள்ளைக்கு சந்தோஷமே இல்லாமப் போச்சு...''

''அம்மா...''

''போ.... போய் மொதல்ல வாசல்ல நின்னு வந்தா அப்படியே தொரத்து. அவனை நீ உள்ளே விட்டே... அப்புறம் நான் மனுஷியா இருக்க மாட்டேன். ம்... போடா.. வாசலுக்கு...''

''இதோ போறேம்மா...''

பாகீரதியின் ஆவேசத்தில் அரண்டவனாய் வாசலை நோக்கிப் போனான் மோகன கிருஷ்ணன்.

## 13

**மா**ர்ச்சுவரியிலிருந்து வெரோனிகாவை வாங்கி-ஊட்டி மண்ணுக்குக் கீழே ஆறடி ஆழத்தில் ஏராளமான மாலைகளோடு அடக்கம் செய்த



நான்காவது நாள்.

காலை ஆறு மணி பதினாறு நிமிஷம். கிழக்கில் சூரியனின் விளிம்பு தெரிகிற நேரம்.

கங்காதரனின் கெஸ்ட் ஹவுஸ் டெலிபோன் வீர்வீர் என்று வீறிட்டது. நாலு நாள் தாடியோடும், ராத்திரி முழுதும் தூங்காத கண் சிவப்போடும் படுக்கையினின்றும் எழுந்த கங்காதரன் மெல்ல நடையிட்டுப் போய் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ... கங்காதரன் ஹியர்...''

''மிஸ்டர் கங்காதரன்...! நான் இன்ஸ்பெக்டர் பேசறேன்...''

''ஓ! நீங்களா... என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''வெரோனிகாவோட கொலைக்குக் காரணமானவனைக் கண்டுபிடிச்சுட்டோம்...''

''ரியலி...?'' -கங்காதரனின் கையிலிருந்த ரிஸீவர் துள்ளியது. ஆவேசமாய்ப் படபடத்தான்.

''யாரவன்...? இப்பவே வந்து அவனை ரெண்டாக் கிழிக்கறேன்...''

''அந்த அவசியம் உங்களுக்கு வராது கங்காதரன்...''

''என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?''

''டெரர் பீச் ஸ்பாட்... உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''தெரியும்...''

''உடனே புறப்பட்டு அங்கே வாங்க! ஸ்பாட்டுக்கு வந்தா உங்களுக்கு எல்லாமே புரியும்... வர்றீங்களா''

''வர்றேன்...''

ரிஸீவரை வைத்தான் கங்காதரன்.

பக்கத்துப் பக்கத்து அறைகளில் இருந்த பாகீரதியும், மோகன கிருஷ்ணனும் தூக்கக் கலக்கத்தோடு எழுந்து வந்தார்கள்.

''அம்மா... உடனே கிளம்புங்க...! மோகன் நீயுந்தான்''

''எங்கேடா போறோம்?''

''சொல்றேன் கிளம்புங்க...''

முப்பத்து மூணாவது நிமிஷம்.

லேசான பனித் தூவலில் சிக்கியிருந்த டெரர்பீக் ஸ்பாட்டை கார் தொட, மூன்று பேரும் இறங்கினார்கள்.

மலைச் சரிவின் மண் ரோடில் போலீஸ் ஜீப் சாய்வாய் நின்றிருந்தது. உல்லன் போர்வைகளைப் போர்த்தியிருந்த ஒரு ஜனக்கும்பல் கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. சரிவின் இடுப்பில் ஊசி ஊசியாய் யூகலிப்டஸ் மரங்கள் நெருக்கியடித்து நின்றிருந்தன.

கங்காதரன் சரிவை எட்டிப் பார்த்தான்.

கீழே போலீஸ் தலைகள் தெரிந்தன.

நடுவே நின்றிருந்த இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் கையசைத்துக் கூப்பிட்டார்.

''வாங்க கங்காதரன்...''

சிரமப்பட்டுக் கீழே போனார்கள். போனதும்... அதிர்ந்தார்கள்.

வெள்ளை வெளேரென்று பாதங்கள் தெரிய - போர்வையால் போர்த்தப்பட்ட அந்த உடல் கண்ணில்பட்டது.

''இன்ஸ்பெக்டர்...!'' - கங்காதரன் எச்சிலை விழுங்கினான்.

''உங்க மனைவி வெரோனிகாவைக் கொன்னவன்... ஆளைப்பார்க்கறீங்களா? கான்ஸ்டபிள்... துணியை எடுத்துடுங்க!'' - இன்ஸ்பெக்டர் சொல்ல, உடலின் மேல் பரவியிருந்த போர்வையை உருவினார் கான்ஸ்டபிள்.

உறைந்து போன ரத்தத் திட்டுகளோடு - செவேலென்ற வெளிநாட்டு இளைஞன், அடர்த்தியான பழுப்பு முடி. திறந்திருந்த நீலக் கண்களில் உயிரை விட்டிருந்தான். கைகளும், கால்களும் எசகு பிசகாய் முறிந்திருந்தன. எங்கும் ரத்தம். எதிலும் ரத்தம்.

இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன் கீழே கிடந்த அந்த ஜோல்னாப் பையை எடுத்தபடி சொன்னார். ''கங்காதரன்! இவன் மிக்கேல் ஆலன். இட்டாலி...



இந்த லெட்டரைப் படிச்சா உங்களுக்கு எல்லாமே புரியும்..''

மெலிதான நீல நிறக் காகிதத்தில் கிறுக்கலான ஆங்கில வரிகள் ஓடியிருந்தன.

(கடிதத்தைத் தமிழாக்கித் தருகிறேன்)

''போலீஸ் துறைக்கு,

தொந்தரவு கொடுப்பதற்காக என் வருத்தம். நான் மிக்கேல் ஆலன். இட்டாலி... என்னுடைய இதர விபரங்கள் பாஸ்போர்ட்டில் இருக்கும். சேகரித்துக் கொள்ளுங்கள். என் மரணத்திற்காக யாரையும் சந்தேகப்படாதீர்கள். இது ஒரு சுத்தமான தற்கொலை. காரணம் கேட்பீர்கள். காதல் தோல்வி. கங்காதரன் என்கிற இந்திய இளைஞனைக் கல்யாணம் செய்து கொண்ட வெரோனிகா என்னுடைய முன்னாள் காதலி. நன்றாகப் பழகிக் கொண்டிருந்தவள் திடீரென்று என்னை வெறுக்க ஆரம்பித்தாள். சந்திப்புகளைத் தவிர்த்தாள். காரணம் புரிவதற்குள் இந்திய இளைஞனோடு இந்த மண்ணுக்கு வந்துவிட்டாள். வெரோனிகாவின் துரோகத்தால் ஆத்திரமானேன்... எனக்கு உபயோகமாகாத அவள் வேறு யாருக்கும் உபயோகப்படக்கூடாது என்று நினைத்தேன். விளைவு? நான்கு நாட்களுக்கு முன்னால் தொட்டபெட்டாவில் அவளைக் கொன்றேன்... அவள் இறந்தபிறகு நான் இருக்க விரும்ப வில்லை... ஆகவே இந்த டெரர்பீக்கிலிருந்து குதிக்கிறேன். - மிக்கேல் ஆலன்''.

கங்காதரன் உறைந்து போயிருந்தான்.

இன்ஸ்பெக்டர் அவன் தோளைத் தொட்டார். ''அவன் வெச்சிருந்த டைரியில் உங்க ஒய்ப் வெரோனிகாவோட போட்டோவும்... அவன் அவளுக்கு எழுதின சில லெட்டர்ஸும் இருந்தது... பார்க்கறீங்களா?''

''ம்''

போட்டோவை நீட்டினார்.

வெரோனிகா புல்தரையில் மல்லாந்து

சிரித்தாள்.

''கங்காதரா... என்னடா இதெல்லாம்...?'' - பாகிரதி இருட்டடித்த முகத்தோடு கங்காதரனின் கையைப் பற்றினாள்.

கங்காதரன் பதில் பேசாமல் அந்தப் போட்டோவையே வெறித்தான்.

''நீங்க இவனை எங்கேயாவது பார்த்திருக்கீங்களா கங்காதரன்?'' - நஞ்சய்யன் கேட்டார்.

''இல்ல...''

''வெளி நாட்டுல..?''

''பார்த்ததா ஞாபகம் இல்லே...''

''இந்த மிக்கேல் ஆலனைப் பத்தி வெரோனிகா ஏதாவது சொல்லியிருந்தாளா?''

''சொல்லலை...''

சரிவின் மேலே கும்பல் இப்போது அதிகமாயிருந்தது. சூரியன் பனிப் படலத்தைத் துடைத்து வெளிச்சத்தைப் பரப்பியிருந்தான். மிக்கேல் ஆலனை ஸ்ட்ரெச்சரில் தூக்கிப் போட்டு - போர்வையால் மூடிக் கயிற்றால் கட்டி - போஸ்ட் மார்ட்டத்துக்குக் கொண்டு போவதில் இரண்டு கான்ஸ்டபிள்கள் சுறுசுறுப்பாய் இருந்தார்கள்.

''போலாமா கங்காதரன்...?''

''இன்ஸ்பெக்டர்...!''

''எஸ்...''

''வெரோனிகாவோட கேஸ் இவ்வளவு சீக்கிரத்துல - சுலபமா அவிழ்ந்து போனதுல உங்களுக்கு சந்தோஷம் இருக்கலாம். ஆனா எனக்கு இப்பதான் உண்மையான கவலையே ஆரம்பமாகப் போகுது...''

''என்ன சொல்றீங்க?''

''இன்ஸ்பெக்டர்... என்னோட பர்சனல் ரிக்வெஸ்ட் ஒண்ணைச் சொல்லலாமா?''

''சொல்லுங்க...''

''மிக்கேல் ஆலனோட தற்கொலையில் வெரோனிகாவை சம்பந்தப்படுத்தி அவ



பேரைக் கொச்சப்படுத்தாம இருக்கணும். செய்வீங்களா இன்ஸ்பெக்டர்?''

''நாட் பாசிபிள் கங்காதரன். மிக்கேல் ஆலனோட லெட்டர் துல்லியமா இருக்கு... இதுல எதையுமே மறைக்க முடியாது... ஸாரி...''

கங்காதரன் அயர்ச்சியோடு மேலே ஏறி ரோடுக்கு வந்தான். ஸ்ட்ரெச்சரில் வந்த மிக்கேல் ஆலனைப் பார்க்க கும்பல் முண்டியடித்துக் கூடவே ஓடியது.

காரில் ஏறவும் தோன்றாமல் பிரமிப்பாய் நின்றிருந்த கங்காதரனின் தோளைத் தொட்டாள் பாகிரதி.

''போலாமா கங்காதரா...?''

''அம்...மா!'' - உடைந்தான்.

''அவனுக்காக இனிமே அழாதே...!''

## 14

**பா**கிரதி வயிறு எக்கி, கண்களில் நீர் தளும்பச் சிரித்தாள். எதிரே உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்த மகன் மோகன கிருஷ்ணனிடம் கேட்டாள்.

''அந்த மிக்கேல் ஆலனை எங்கிருந்துடா பிடிச்சே... மோகன்...?''

சிரிப்பை நிறுத்தினான் மோகனகிருஷ்ணன்.

''அதையேம்மா கேட்கிற. மூணு நாளா ஊட்டி பூராவும் அலைஞ்சு களைச்சுப் போயிட்டேன். நாலாவது நாள் சாயங்காலம் போட் ஹவுஸ்ல அவனைப் பார்த்தேன்... கஞ்சா அடிக்கிறதுக்காகக் கையிலே காசு இல்லாமே எல்லார்கிட்டேயும் கை நீட்டிட்டிருந்தான்... பார்த்ததுமே புரிஞ்சுகிட்டேன் நாடோடி ஹிப்பின்னு. நூறு ரூபா காட்டி வெளியே கூட்டிட்டு வந்தேன். ...பாஸ்போர்ட் வெச்சிருந்தான்.. டைரி வெச்சிருந்தான்... ஜனநடமாட்டம் இல்லாத இடத்துக்குப் போயி இஷ்டத்துக்கு கஞ்சா வாங்கிக் குடுத்து ஆளைச் சுருளவெச்சு டெரர் பீக் ஸ்பாட்டுக்கு கார்ல கொண்டு போயிட்டேன்... லேசா வெளிச்சம்

இருக்கிறப்பவே பீக்கிலிருந்து அவனை உருட்டி விட்டேன்... அப்புறம் சாவகாசமாக் கீழே இறங்கிப் போய், அந்த லெட்டர், போட்டோ எல்லாத்தையும் வெய்க்க வேண்டிய இடத்துல வெச்சுட்டு வந்துட்டேன்.''

''முடிச்சை அழகா அவிழ்த்திருக்கோம்... எங்கேயும் இடறல் இல்லையே...? - பாகீரதி புடவைத் தலைப்பால் மூக்குக்கண்ணாடியைத் துடைத்து - மாட்டியபடி கேட்டாள்.

''மூளையை முழுசா உபயோகப்படுத்தினா எந்தத் திட்டத்திலும் இடறல் வராதும்மா... வெரோனிகாவை முடிச்ச கையோட... ஊர் பேர் தெரியாத ஹிப்பியை முடிச்சோம்... ரெண்டு பேர்க்கும் ஒரு முடிச்சைப் போட்டோம். இந்த நிமிஷம் வெரோனிகா கேஸ் பைலை போலீஸ் மூட்டை கட்டிப் பரணுக்கு எறிஞ்சாச்சு...''

''கங்காதரனும் வெரோனிகாவும் ஊட்டி புறப்பட்டுப் போனப்போ... நீயும் அவங்களுக்குத் தெரியாமே புறப்பட்டுப் போனே! நாலு நாள் ஊட்டியிலே இருந்திருக்கே... அந்தச் சமயத்துல யார் கண்ணிலும் நீ படலையே?''

''படலைம்மா.''

''யார் கண்ணிலாவது படப்போய்... சந்தேகம் வந்துட்டா - நீ தப்பிக்க முடியாது மோகன்.''

''நீ ரொம்பவும் பயப்படறேம்மா.''

''இந்த மாதிரி விஷயங்களுக்கெல்லாம் பயம் அவசியம் வேணும்.'' பாகீரதி சொல்ல, அதே நேரம் -

வீட்டுக்கு வெளியே காலிங்பெல் கூப்பிட்டது.

''வக்கீலுக்கு போன் பண்ணியிருந்தேன். அவர்தான் வந்திருப்பார். போய் பார் மோகன்.''

மோகன கிருஷ்ணன் போனான். கதவைத் திறந்து வக்கீல் அண்ணாஜிராவைக் கூட்டிக் கொண்டு வந்தான். மீசையிலும் தலையிலும் 'பொல்'லென்று நரைத்திருந்தார். மூக்குக் கண்ணாடியில் கீழ்ப்பார்வை பார்த்தார்.

''வாங்க அண்ணாஜிராவ். கோர்ட்டுக்குப் புறப்பட்டுட்டீங்களா?''



''ஆமாம்மா.''

''உட்காருங்க.''

அண்ணாஜிராவ் உட்கார்ந்தபடியே கேட்டார்.

''ஊட்டியிலிருந்து எப்போம்மா திரும்பினீங்க?''

''நேத்து ராத்திரி.''

''கங்காதரன் நல்ல பிள்ளை. அவனுக்கு இப்படியொரு மனக்கஷ்டம்... ம்... வெளியே போயிருக்கானா?''

''மனசு சரியில்லேன்னு கிளப்புக்குப் போனான், அண்ணாஜிராவ்! கங்காதரன் மனகல ரணப்பட்டுப் போயிருக்கான். அந்த ரணம் ஆறக் கொஞ்ச நாளாகும்.''

அண்ணாஜிராவ் தன் கையிலிருந்த தோல் பையைப் ப்பார்த்தார். ''நீங்க சொன்னபடியே உயிலோட நகலைக் கொண்டாந்திருக்கேம்மா.''

பாகீரதி மகனை ஏறிட்டாள். ''மோகன்! வாசல் கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டுட்டியா?''

''போட்டுட்டேன்மா.''

''அண்ணாஜிராவ்!''

''அம்மா!''

''என்னோட கணவர் சாகிற நேரத்துல தத்துபித்துத்தனமா ஒரு உயிலை எழுதி வெச்சாரே... அந்த உயிலோட வாசகங்களை மறுபடியும் ஒரு தடவை நிதானமாப் படிங்க.''

அண்ணாஜிராவ் தன் கையிலிருந்த பழுப்புக் கவரின் வாயை ஊதி அதிலிருந்து கோர்ட் வாசனை அடிக்கும் அந்த இளம் பச்சை நிறக் காகிதங்களை எடுத்தார். தலையைச் சாய்த்துக் கீழ்ப் பார்வை பார்த்து அடங்கிய குரலில் படித்தார்.

**''இப்பவும் என் ஆத்மார்த்த சுய நினைவோடும் எந்த விதமான அந்நிய நிர்ப்பந்தமும் பயமுறுத்தலும் இல்லாமல்...''**

''அந்தப் புராணத்தையெல்லாம் படிக்காதீங்க அண்ணாஜிராவ். முக்கியமான வாசகங்களுக்கு வாங்க.'' - பாகீரதி சொல்ல அண்ணாஜிராவ் பாரா பாராவாய்த் தாண்டி உயிலின் உயிர்நாடி

வாசகங்களை மேய்ந்தார்.

''விலாவரியாக மேற்குறிப்பிட்ட என்னுடைய சம்பாத்தியத்தில் சேர்ந்த நாற்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்து முழுவதும் என்னுடைய அந்திமக் காலத்துக்குப் பிறகு என்னுடைய முதல் மனைவி பார்வதிக்குப் பிறந்த கங்காதரனுக்குப் போய்ச் சேரவும், அதை அனுபவிக்கவும் உரிமையளிக்கிறேன். என்னுடைய இரண்டாவது மனைவி பாகீரதியும், அவளுக்குப் பிறந்த மகன் மோகன கிருஷ்ணனும் கங்காதரனுக்குத் துணையாய் இருந்து சொத்துக்களைக் கட்டிக்காத்து வர வேண்டியது. இந்த உயில் காரணமாக கங்காதரனின் உயிர்க்கு ஏதேனும் ஆபத்து வரும் என்று நான் நினைப்பதால்-கங்காதரன் இயற்கையாய் மரணமடையாமல் வேறு காரணங்களால் அகால மரணம் அடைந்தால் சொத்து முழுவதும் அவனுடைய மனைவியாகும் பெண்ணுக்குப் போய்ச் சேர வேண்டியது. மனைவி இல்லாத பட்சத்தில், சொத்து முழுவதும் முருகனின் ஆறுபடை வீடுகளுக்குப் போய்ச் சேர ஒப்புதல் அளிக்கிறேன். முப்பது வயதுக்கு மேற்பட்டு கங்காதரன் இயற்கையாய் மரணமடைந்தால் சொத்தில் பத்து லட்சத்தை என் இரண்டாவது மனைவி பாகீரதிக்கும், இன்னொரு பத்து லட்சத்தை அவளுக்குப் பிறந்த மோகன கிருஷ்ணனுக்கும் போய்ச் சேர ஒப்புதல் அளிக்கிறேன். மீதியுள்ள சொத்து முழுவதும் அவனுடைய மனைவிக்கோ, மனைவி இல்லாத பட்சத்தில் தர்ம ஸ்தாபனங்களுக்கோ போய்ச் சேர வேண்டியது. மேலும்...''

''போதும் அண்ணாஜிராவ். இதுவரைக்கும் படிச்ச வாசகங்களே போதும்.'' - பாகீரதி கையமர்த்தினாள். அண்ணாஜிராவ் வாயை மூடி - உயிலின் நகலைக் கவருக்குள் போட்டார். கேட்டார்.

''பெரியவர் தன்னோட உயில்ல... உங்க ரெண்டு பேரையும் இப்படித் துடைச்சு



வெச்சிருக்காரேம்மா... ஏம்மா?''

பாகீரதி சோகையாய்ச் சிரித்தாள்.

''அவரைத்தான் கேட்கணும்!''

''இந்த உயில்ல உங்களுக்கு இப்போ என்ன சந்தேகம்! கேளுங்கோ சொல்றேன்''

பாகீரதி எழுந்தாள். ''சந்தேகம் ஒண்ணுமில்லை அண்ணாஜிராவ். என்மகன் மோகன் உயிலைப் படிக்கச் சொல்லிக் கேக்கணும்ன்னு சொன்னான். அதான் கூப்பிட்டேன்.''

அண்ணாஜிராவ் எழுந்தார்.

''பெரியவரு தங்கமானவருதான்... உயில் விஷயத்துல உங்க ரெண்டு பேர்க்கும் ஏன் இப்படிப் பண்ணினார்னு தான் தெரியலை.'' - முனகிக் கொண்டே வாசலை நோக்கிப் போனார்.

அண்ணாஜிராவின் தலை மறைந்ததும் பாகீரதி மகனிடம் கேட்டாள்.

''என்னடா மோகன்... உயிலோட சாரத்தைக் கேட்டியா?''

''ம்...''

''முப்பது வயசுக்கு மேல கங்காதரன் இயற்கையா செத்துப் போனாத்தான் நம்ம ரெண்டு பேர்க்கும் தலைக்குப் பத்து லட்சம் கிடைக்கும். அவனோட மரணத்துல கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் வந்தது பூராவும் தர்ம ஸ்தாபனங்களுக்குப் போயிடும்.''

''புரியுதும்மா... கங்காதரனுக்கு இப்போ என்ன வயசு இருக்கும்?''

''முப்பதைத் தாண்டிட்டான். இப்ப முப்பத்தி ஒண்ணு நடக்குது.''

''இயற்கையா மரணம் வர்ற வயசில்லை அவனுக்கு...'' - நெற்றியைத் தேய்த்தான் மோகன கிருஷ்ணன்.

''என்ன பண்ணலாம்?''

''வராத சாவை வரவழைக்கணும் அம்மா.''

''எப்படி?''

''கொஞ்சம் யோசிக்கணும். உடம்புல கீறல் விழாமே அவன் சாகணும். அவன் செத்ததுமே

மரணம் இயற்கையா... செயற்கையான்னு கண்டுபிடிக்க டாக்டரை வரவழைப்பார் நம்ம வக்கீல் அண்ணாஜிராவ். டாக்டர் சந்தேகப் பட்டா... உயில் நம்ம ரெண்டு பேர்க்கும் பெப்பே காட்டிடும்.''

''மோகன்... இதுவரைக்கும் நாம போட்ட திட்டத்துல எங்கேயும் - தோற்கலை. எல்லாத்தையுமே கண்ணாடி மாதிரி கச்சிதமா செஞ்சிருக்கோம். கங்காதரன் சாகப் போற அந்த வைபவத்தையும் அழகா செஞ்சு முடிப்போம்.''

பாகிரதி பேசிக் கொண்டிருந்த அதே நேரம் -

டெலிபோன் கத்தியது.

மோகன கிருஷ்ணன் அதனுடைய இரண்டாவது கத்தலில் எடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனை அவசர தொனியில் பேசியது.

''மிஸ்டர் மோகன கிருஷ்ணன்! ஏபெக்ஸ் கிளப்பிலிருந்து செக்ரட்டரி ஜோதிவேல் பேசறேன். நீங்க உடனடியா புறப்பட்டு கிளப்புக்கு வர முடியுமா? உங்க பிரதர் கங்காதரன் ஓவரா குடிச்சு மயங்கி விழுந்துட்டார். கான்ஷியஸ் இல்லாமே கிடக்கார். நீங்க வந்து அவரை எடுத்துட்டுப் போயிடறீங்களா?''

''இதோ இப்ப வர்றேன்.''

''ப்ளீஸ்... வாங்க...''

ரிஸீவரை வைத்தான் மோகன கிருஷ்ணன். பாகிரதி கேட்டாள்.

''யார்டா போன்ல?''

''கிளப் செக்ரட்டரி பேசினார். கங்காதரன் ஓவரா குடிச்சிட்டு மயக்கமா விழுந்து கிடக்கிறானாம். செத்துப் போன பொண்டாட்டியை மறக்க குடிக்கக் கத்துக்கிட்டான் போலிருக்கு...''

''அவனை எடுத்து கார்ல போட்டுட்டு வா... அவன் இயற்கையா சாகிறதுக்காக அஸ்திவாரம் போடலாம்.''

மோகன கிருஷ்ணன் புரியாமல் பாகிரதியைப்



பார்க்க-

''நீ போய் முதல்ல அவனைக் கொண்டா. எல்லாமே சொல்றேன்'' என்றாள்.

## 15

''அளவுக்கு மீறின குடி ஆளை அசத்தியிருக்கு... மத்தபடி பயப்படற அளவுக்கு ஒண்ணுமில்லை. பாகிரதியம்மா...'' - டாக்டர் பவித்ரன் 'கிட்'டை மூடிப் புறப்பட எழுந்தார். கங்காதரன் சலனமில்லாமல் கட்டிலில் மல்லாந்திருந்தான்.

''டாக்டர்...''

''என்னங்கம்மா...?''

''உங்க கூடக் கொஞ்சம் பேசணும்''

''பேசலாமே...'' - டாக்டர் பவித்ரன் கிட்டை மோடாவில் அமர்த்திவிட்டு நாற்காலியில் சாய்ந்தார். பாகிரதி மகன் மோகன கிருஷ்ணனைப் பார்த்தாள்.

''வாசல் கதவு சாத்தியிருக்கா மோகன்...?''

''சாத்தியிருக்கம்மா...''

''சரி... நீ... இங்கேயே கங்காதரனுக்குப் பக்கத்துல உட்கார்ந்திட்டிரு மோகன்... நான் நம்ம டாக்டர் கூடக் கொஞ்சம் பேசிட்டு வர்றேன்... வாங்க டாக்டர்... நாம மாடிக்குப் போயிடலாம்...''

டாக்டர் பவித்ரன் குழப்பமாய் இருவரையும் பார்த்தபடி எழுந்தார். மாடியை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட்ட பாகிரதியைத் தொடர்ந்தார்.

மாடியிலிருந்த கடைசி அறைக்குள் பாகிரதி நுழைந்து, டாக்டர் உள்ளே வந்ததும் கதவைச் சாத்தினாள். பவித்ரன் பரபரத்தார்.

''என்னம்மா... என்ன விஷயம்...?''

''சொல்றேன் டாக்டர்... இப்படி உட்காருங்க...'' - பாகிரதி நாற்காலியில் சாய்ந்து எதிரேயிருந்த சோபாவைக் காட்டினாள். டாக்டர் உட்கார்ந்ததும் கேட்டாள்.

''டாக்டர்! இந்த வீட்டுக்கு நீங்க எத்தனை வருஷமா குடும்ப டாக்டரா இருந்துட்டு வர்றீங்க...?''

''ஒரு பத்து வருஷம் இருக்கும்...''

''எனக்கும் சரி... என்னோட மகன் மோகனுக்கும் சரி... உங்க ட்ரீட்மெண்ட்ல அசாத்திய நம்பிக்கை இருக்கு...''

''தேங்க்ஸ்...''

''ஆனா... உங்க பேர்ல கங்காதரனுக்குக் கொஞ்சம் அதிருப்தி இருக்கு.''

பவித்ரன் முகம் மாறினார்.

''அப்படியா...?''

''நீங்க கவனிச்சிருக்க மாட்டீங்க... என்கிட்டயே ரொம்ப தடவை சொல்லியிருக்கான்... 'ஃபேமிலி டாக்டரை மொதல்ல மாத்தணும்... கைராசியில்லாத ஆளு... ட்ரீட்மெண்ட் சரியாத் தராததினாலதான் அப்பா செத்தார்'ன்னு அடிக்கடி சொல்வான்...''

''ஐஸிட்...?''

''உங்க பேர்ல அவனுக்கு அதிருப்தி இருக்குங்கிறதை ஒரு உதாரணம் மூலமா சொன்னா உங்களுக்குப் புரியும்... அவன் ஃபாரின் போறதுக்கு முன்னாடி-உங்க நர்ஸிங் ஹோமை சீக்கிரமாகக் கட்டி முடிக்கிறதுக்காக அம்பதாயிரம் ரூபா ஃபண்ட்ஸ் கேட்டீங்க... அதுக்கு அவன் என்ன சொன்னான்?''

''ஃபாரின் ட்ரிப்பை முடிச்சிட்டு வந்து தர்றதா சொன்னார்...''

பாகீரதி சிரித்தாள்.

''என்ன அழகாத் தட்டிக் கழிச்சிருக்கான்னு பார்த்தீங்களா டாக்டர்? அவன் நினைச்சிருந்தா அடுத்த நிமிஷமே கூடப் பணத்தை எடுத்துக் குடுத்திருக்கலாம். ஆனா அவன் செய்யலை... காரணம்... உங்களை அவனுக்குப் பிடிக்கலை...''

பாகீரதி கொடுத்த இந்த எதிர்பாராத அதிர்ச்சியில் சில விநாடிகள் உறைந்தார் டாக்டர். பாகீரதி மெல்லச் சிரித்தபடி கேட்டாள்.



''அந்த நர்சிங்ஹோமை நீங்க இன்னமும் கட்டி முடிக்கலைன்னு கேள்விப்பட்டேன். வாஸ்தவமா டாக்டர்?''

''ஆமாம்மா. கட்டிடம் பாதி செங்கல் பூச்சோடு நிக்குது. பேங்க் லோன் கிடைக்கலை. கட்டிடத்தை நிறுத்திட்டேன்.''

''நான் பணம் தர்றேன். கட்டிடத்தைக் கட்றீங்களா டாக்டர்?''

டாக்டர் பவித்ரன் மலர்ந்தார்.

''நிஜமாத்தான் சொல்றீங்களாம்மா?''

''நிஜம்தான். நீங்க அந்த கங்காதரன்கிட்டே அம்பதாயிரம் கடனா கேட்டீங்க... அவன் தரலை! நான் லட்சரூபாய் தர்றேன். கடனா இல்லை. உங்களுக்கு நன்கொடை மாதிரி தர்றேன். ஒரு பைசா நீங்க திருப்பித்தர வேண்டியதில்லை. அந்த லட்ச ரூபாயை வெச்சுக்கிட்டு மீதிக் கட்டிடத்தை ஜாம்ஜாம்ன்னு கட்டி முடிக்கலாம்... என்ன சொல்றீங்க?''

''அம்மா...'' - பரவசமாய் எழுந்து நின்றார் டாக்டர் பவித்ரன். ''ரொம்பவும் நன்றிம்மா'' கைகளைச் சேர்த்து பாகீரதியைக் கும்பிட்டார்.

''பணம் உங்களுக்கு என்னிக்கு வேணும் டாக்டர்?''

''நாளைக்கே குடுத்தா... கட்டிட வேலையை ஆரம்பிச்சுடுவேம்மா. இந்த நர்சிங் ஹோமைக் கட்ட முடியாமபாதியில நிறுத்தினதில் டாக்டர்ஸ் வட்டாரத்தில எனக்கு ஏகப்பட்ட தலைகுனிவு. மாமனார் வீட்டுக்குப் போனா முந்தி மாதிரி மரியாதைகூட இல்லை.''

''டாக்டர்... ஒரு லட்ச ரூபாயைத் தூக்கி 'ஹாட்கேஷா' உங்க கையில குடுக்கப் போறேன், அந்த நன்றியை மனசுல வெச்சுகிட்டு எனக்காக ஒரு சின்ன காரியம் பண்ணணும்.''

''சொல்லுங்கம்மா... பண்றேன்.''

''நான் சொன்ன பின்னாடி நீங்க நழுவக் கூடாது.''

''இல்லீங்கம்மா... அது என்னவாயிருந்தாலும்

பண்றேன். சொல்லுங்கம்மா.''

''டாக்டர்...!''

''ம்... சொல்லுங்கம்மா...''

''கங்காதரனை சாகடிக்கணும்.''

''பாகீரதியம்மா!'' - விலுக்கென்று எழுந்து உட்கார்ந்தார் டாக்டர் பவித்ரன். ''எ... எ... என்னம்மா சொ... சொன்னீங்க?''

''கங்காதரனை இயற்கையா சாகடிக்கணும். நீங்க படிச்சிருக்கிற மருத்துவம் அந்த அற்புதத்தைப் பண்ணும்ன்னு எனக்குத் தெரியும்.''

டாக்டர் பவித்ரன் அதற்குள் நெற்றி முழுவதும் சொதசொதவென்று வியர்த்திருந்தார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, சட்டைப் பையில் தேய்த்துக் கொண்டார்.

பாகீரதி சிரித்தாள்.

''பதட்டப்படாதீங்க டாக்டர்... என்னோட கணவர் எந்த மாதிரியான உயிலை எழுதி வெச்சிருக்கார்னு உங்களுக்கே தெரியும்... என்னோட பங்குக்குப் பத்து லட்சமும், எம் மகனோட பங்குக்குப் பத்து லட்சமும் கங்காதரன் செத்தா தான் வரும். அதுவும் அவன் இயற்கையா சாகணும். விபத்திலயோ, கொலை செய்யப்பட்டோ அவன் செத்தா சொத்து பூராவும் தர்மத்துக்குப் போயிடும். இந்த மாதிரியான ஒரு அநியாய உயிலை நீங்க எங்கேயுமே பார்த்திருக்க முடியாது டாக்டர். ஒவ்வொரு சல்லிக் காசுக்கும் நானும் என் மகனும் அந்த கங்காதரனோட கையை எதிர்பார்த்துக்கிட்டுப் பிச்சைக்காரத்தனமா வாழ்ந்துட்டிருக்கோம். எங்க ரெண்டு பேரோட கனவுகள் பூராவும் அந்தப் பத்து லட்சத்துலத்தான் இருக்கு. கங்காதரன் செத்து அந்த உயிலோட வாசகங்கள்படி எனக்கு பத்து லட்சம் வந்தா உங்களுக்கு அதுல ஒரு லட்சம் தனியா ஒதுக்கிடறேன். என்ன சொல்றீங்க டாக்டர்?''

பவித்ரன் கர்ச்சீப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டு யோசித்தார்.



''உயிரைக் காப்பாற்றித்தான் எனக்குப் பழக்கமம்மா. முதல் தடவை ஒரு உயிரை எடுக்கிறதுக்கு இன்னிக்குத்தான் நான் யோசிக்கிறேன்.''

''டாக்டர் ...! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உங்களுக்கு ஒரு லட்சம் தர்றதா சொன்னேன். இப்ப சொல்றேன். இன்னொரு லட்சமும் சேர்த்துத் தர்றேன். நர்சிங்ஹோமை அமர்க்களமாக் கட்டி முடிங்க. மாமனார்க்கு முன்னாடி நிமிர்ந்து நில்லுங்க.''

பவித்ரன் கண்ணை மூடி நெற்றியைத் தட்டிக் கொண்டு யோசித்தார். சிறிது நேர யோசனைக்குப் பின், ''ஒரு வழி இருக்கு'' என்று முனகினார்.

''சொல்லுங்க டாக்டர்.''

''இப்போ நான் வேலை பார்த்திட்டிருக்கிற கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல் 'லேப்'ல 'வைரஸ் ஸீரம்' ஒண்ணு வெச்சிருக்காங்க. அதை ப்ளட்ல இஞ்செக்ட் பண்ணி விட்டா ஒரே வாரத்துல 'ப்ளட் கான்சர்' அட்டாக் ஆயிடும். ஆசாமி மூணு மாசத்துல செத்துடுவான்.''

''அதையே பண்ணுங்க டாக்டர். ப்ளட் கான்சர் யாருக்கு வரும்; வராதுன்னு யாராலேயும் சொல்ல முடியாது. கங்காதரன் ப்ளட் கான்சர்ல செத்தான்னா யாருக்கும் எந்த சந்தேகமும் வராது. உயில் வாசகப்படி அந்தப் பத்து லட்சம் எம்பேர்க்கு வர்றதுல ஒரு சிக்கலும் இருக்காது. என்னிக்கு அந்த ஊசியைப் போடறீங்க டாக்டர்?''

''நாளைக்கே!''

பாகீரதி புன்னகைத்தாள்.

மறுநாள் காலை ஆறுமணி.

கங்காதரன் இன்னும் தூக்கத்தில் இருந்தான். அவனுக்கு இருபுறமும் பாகீரதியும், மோகன கிருஷ்ணனும் நின்றிருக்க - கங்காதரனின் தலைமாட்டில் டாக்டர் பவித்ரன் ஸிரிஞ்சோடு காத்திருந்தார். ஒரு சின்ன டெஸ்ட் ட்யூபில் அழுக்கு

நீராய், தெரிந்த வைரஸ் ஸீரத்தை சிரஞ்சில் சிரத்தையாய் ஏற்றிக் கொண்டு, தூங்கிக் கொண்டிருந்த கங்காதரனின் புஜத்தைப் பற்றினார் டாக்டர்.

கங்காதரன் புரண்டு படுத்தான்.

டாக்டரின் ஸ்பரிசத்தில் கண் மலர்ந்தான். மெல்ல எழ முற்பட்டான். பாகீரதி சட்டென்று முன் வந்து அவனுடைய தலையைக் கோதினாள்.

''கங்கா, உடம்புக்குக் கஷ்டமாயிருந்தா அப்படியே படுத்துக்கோப்பா. நம்ம டாக்டர்தான் வந்திருக்கார். நேத்து ராத்திரி பூராவும் உனக்கு நல்ல ஜ¬ரம்...''

''கங்காதரன்...! புஜத்தைக் கொஞ்சம் நீட்டுங்க... ஒரு இஞ்செக்ஷன் குடுத்தா எல்லாமே சரியாயிடும்...'' - பவித்ரன் சொல்ல - வேண்டா வெறுப்பாய்த் தன் புஜத்தைக் காட்டினான் கங்காதரன்.

சட்டென்று புஜத்தில் ஊசியைப் பதித்து-

அந்த அழுக்கான ஸீரம் முழுவதையும் உள்ளே அனுப்பினார் பவித்ரன். முகம் வேர்வையில் எண்ணெய் பூசின மாதிரி மினுமினுத்தது. டாக்டருக்கு.

கங்காதரன் படுக்கையினின்றும் எழுந்தான்.

''அம்மா. வயித்தை ஏகமாப் பசிக்குது... டிபன் வேணும்..''

பாத்ரூமை நோக்கிப் போனான்.

பாகீரதியும் டாக்டரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள். பாகீரதி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

''டாக்டர்... நீங்க ரொம்பவும் பயப்படறீங்க...! அந்த இஞ்செக்ஷனைப் போடறதுக்குள்ளே வேர்த்திட்டீங்க... இந்தப் பதட்டம் உங்களுக்கு இருக்கக் கூடாது...''

''ஸாரி பாகீரதியம்மா...''



''ஸீரம் எப்பயிருந்து வேலை செய்யும் டாக்டர்...?''

''ரத்தத்துல கலந்த அடுத்த விநாடியிலிருந்தே வேலை செய்ய ஆரம்பிச்சுடும்...''

''கேட்கவே சந்தோஷமாயிருக்கு டாக்டர்...'' - பாகீரதி சொல்லிக் கொண்டிருந்த அதே நேரம் - வாசலில் காலிங்பெல் கூப்பிட்டது.

மோகன கிருஷ்ணன் மாடிப்படிகளில் தடதடத்துக் கீழே இறங்கிப் போனான்.

வரும்போது முகம் இருண்டு வந்தான்.

அவனுக்குப் பின்னால் - இன்ஸ்பெக்டர் நஞ்சய்யன்.

பாகீரதி அதிர்ச்சியை சுதாரித்துக் கீழே இறங்கி வந்தாள். ''வாங்க இன்ஸ்பெக்டர்.''

''வெரோனிகா கேஸ் ஏறக்குறைய க்ளியராயிடுச்சுன்னு நினைச்சுட்டிருந்த நேரத்துல ஒரு சின்னக் குழப்பம். மிக்கேல் ஆலன் உண்மையிலேயே தற்கொலை பண்ணிக்கிட்டானா? இல்லே அவனை யாராவது கொன்னுட்டாங்களா? அதான் இப்போ பிறந்திருக்கிற குழப்பம்.''

''திடீர்னு எதுக்காக குழப்பம்?'' - மோகன கிருஷ்ணன் அதிர்ந்து போய்க் கேட்டான்.

''காரணம் இருக்கு மோகனகிருஷ்ணன். மிக்கேல் ஆலன் செத்துப் போனதுக்கு முதல்நாள் சாயந்திரம் அவனை யாரோ ஒருத்தன் கூட வெச்சு சிலபேர் பார்த்திருக்காங்க. ஆலனைக் கூட்டிக் கொண்டு போனவன்தான் அவனை ஏதாவது பண்ணியிருப்பான்னு ஒரு யூகம்.''

மோகன கிருஷ்ணன் அடிவயிற்றில் பயம் புது பிரோடாய்க் கிறியது.

''மிக்கேல் ஆலன் கூட டெரர்பீக்ஸ்பாட்டுக்குப் போன அந்த ஆள் இளைஞன். வயசு இருவத்தஞ்சிலிருந்து முப்பதுக்குள். கொஞ்சம்

சுருட்டை முடி... உயரம்... சிவப்பு நிறம்... போட் ஹவுஸிலும் அவனைப் பார்த்திருக்காங்க...''

ஆயாசமாய்ப் பின்னுக்கு சாய்ந்தார் இன்ஸ்பெக்டர். சட்டைப் பாக்கெட்டிலிருந்தும் சிகரெட் பாக்கெட்டை எடுத்து சிகரெட்டை உருவினார்.

''எக்ஸ்க்யூஸ் மீ... சிகரெட் பிடிச்சு ரொம்ப நேரமாச்சு, கேன் ஐ?''

''பிடியுங்க இன்ஸ்பெக்டர். ஆனா இங்கே ஆஸ்ட்ரே கிடையாது.''

''நோ ப்ராப்ளம்'' - கையோடு கொண்டு வந்திருந்த ப்ரீஃப் கேஸைப் பிரித்தார் நஞ்சய்யன். ''இன்னிக்குக் காலையில ஊட்டியிலிருந்து வந்ததும் கஸ்டம்ஸ்ல ஒர்க் பண்ற என்னோட ப்ரெண்ட் ஒருத்தரைப் பார்க்கிறதுக்காக அவரோட வீட்டுக்குப் போனேன். அவர் கஸ்டம்ஸ்ல சீஸ் பண்ணின இந்த ஆஸ்ட்ரேயை எனக்கு ப்ரசெண்ட் பண்ணினார்.'' - சொல்லிக் கொண்டே அந்தச் சதுரமான வெண்ணிற ஆஷ்ட்ரேயை எடுத்து டீபாயின் மேல் வைத்தார்.

மாடிப் படிகளிலிருந்து டாக்டர் பவித்ரன் இறங்கிக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் நெற்றி சுருங்கி வாய் நிறையப் புகைவிட்டார். ''வர்றவர்...'' - இழுத்தார்.

''டாக்டர்...! எங்க குடும்ப டாக்டர்...!'' - பாகீரதி சொன்னாள்.

டாக்டர் பவித்ரன் இன்ஸ்பெக்டரையே பயப்பார்வை பார்த்துக் கொண்டு வந்தார். ''பாகீரதியம்மா... நான் புறப்படட்டுமா? ஹாஸ்பிடலுக்கு போகணும்.''

''ம்... போங்க டாக்டர்! போயிட்டு சாயந்தரம் வர்றீங்களா?''

''வர்றேன்.''

டாக்டர் பவித்ரன் வாசலை நோக்கி நகர்ந்தார்.



அதே சமயம்-

மாடியின் உச்சியில் கங்காதரனின் தலை தெரிந்தது. ''ஹலோ இன்ஸ்பெக்டர்!'' உற்சாகமில்லாமல் ஹீனமாய் கூப்பிட்டான்.

நஞ்சய்யன் தலை நிமிர்ந்தார்.

சிகரெட்டை ஆஷ்ட்ரேக்கு கொடுத்து விட்டு எழுந்தார்.

''அங்கேயே இருங்க கங்காதரன். நானே வர்றேன்.'' - இன்ஸ்பெக்டர் எழுந்து மாடியை நோக்கிப் போனார். பாகீரதி போகும் இன்ஸ்பெக்டரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா!''

குரல் கேட்டுத் திரும்பினாள் பாகீரதி.

''ஆலனை டெரர் பீக்கிலிருந்து தள்ளிட்டு வர்றப்போ யாராவது உன்னை வழிமறிச்சுப் பேசினாங்களா மோகன்?'' - கேட்டாள்.

''யாரும் இல்லேம்மா.''

''சரி, சரி, இப்ப எதும் பேசாதே. அதப்பார். ரெண்டு பேரும் மாடியிலிருந்து இறங்கி வர்றாங்க.''

கங்காதரனும் இன்ஸ்பெக்டரும் சோபாவை நெருங்கிச் சாய்ந்தார்கள். ப்ரீப் கேஸை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு - அதனைத் திறந்தார் இன்ஸ்பெக்டர். ஒரு கவரை எடுத்தார்.

''மிஸ்டர் மோகன கிருஷ்ணன்! இந்த போட்டோவை கொஞ்சம் பாருங்க.''

இன்ஸ்பெக்டர் நீட்டிய போட்டோவின் மேல் பார்வையைப் போட்டான் மோகன கிருஷ்ணன்.

போட்டோவில் மிக்கேல் ஆலன் தன் அழுக்குப் பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டிருந்தான். அருகில் அவன் தோளைத் தொட்ட மாதிரி மோகன கிருஷ்ணன் உட்கார்ந்திருந்தான்.

''ஸோ... மிக்கேல் ஆலனை உங்களுக்கு

முன்னாடியே-அதாவது - அவன் உயிரோடு இருக்கும்போதே தெரியும். அப்படித்தானே...?''

மோகன கிருஷ்ணன் பாகீரதியை திரும்பிப் பார்த்தான்.

அவள் உறைந்து போயிருந்தாள்.

''மோகன கிருஷ்ணன்! உங்க மதரைப் பார்த்துப் பிரயோஜனமேயில்லை. என்னைப் பார்த்துப் பேசுங்க... மிக்கேல் ஆலனை உங்களுக்கு முன்னாடியே தெரியும் இல்லையா...?''

''ஆ...ஆமா...ஸார்...''

இன்ஸ்பெக்டர் வாசல் பக்கமாய்த் திரும்பிக் குரல் கொடுத்தார்.

சுமதியும், தீபக்கும் தயக்கமாய் உள்ளே வந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் சிரித்தார். ''வர்றது யாருன்னு தெரியுதா மோகன கிருஷ்ணன்...? உங்க மாமா சுந்தரமூர்த்தியோட பொண்ணு சுமதி... பக்கத்துல நிற்கிறவர் தீபக்... ரெண்டு பேருமே லவ்வர்ஸ்... போன வாரம் ஊட்டி வந்திருக்காங்க... போட் ஹவுசில் உட்கார்ந்து பேசிட்டிருந்திருக்காங்க... அப்பத்தான் நீங்களும் அந்த மிக்கேல் ஆலனும் அவங்க கண்ணுல பட்டிருக்கீங்க... சுமதி தன்னோட கையிலிருந்த காமிராவில் உங்க ரெண்டு பேரையும் விளையாட்டா ஸ்நேப் பண்ணி - அதை உங்களுக்கு திடீரென்று காட்டி ஆச்சரியப்பட வைக்கணும்னு நினைச்சிருக்காங்க. அந்த நிமிஷம்தான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு அதிர்ஷ்டமான நிமிஷம்... உங்க ரெண்டு பேரையும் ஸ்நேப் பண்ணி காமிராவில் அடைச்சுட்டு... உங்க கண்ணுல படாம நழுவிட்டாங்க...''

மோகன கிருஷ்ணனும் பாகீரதியும் பிரமித்துப் போய் உட்கார்ந்திருக்க-



இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

''சுமதியும், தீபக்கும் ஃபிலிமை ஊட்டி போட்டோ ஸ்டுடியோவில் குடுத்து டெவலப் பண்ணச் சொல்லி இருக்காங்க... போட்டோ ஸ்டுடியோ போட்டோ கிராபர் கண்ணன் சப்-இன்ஸ்பெக்டர் ரகோத்தமனோட பிரதர். கண்ணன் ஃபிலிமைக் கழுவிப் போட்டு பார்த்திருக்கார். ஆலனோட நீங்க இருக்கிற போட்டோ அவரை நெருடியிருக்கு. அன்னிக்கு வந்த பேப்பர்ல பிரசுரமாகியிருந்த ஆலனோட சவ போட்டோவையும், இந்த போட்டோவையும் ஒப்பிட்டுப் பார்த்திருக்கார். போட்டோ, ரகோத்தமன் மூலமாக என் பார்வைக்கு வந்தபோது அதிர்ந்துட்டேன்.''

மோகன கிருஷ்ணன் குறுக்கிட்டான். அசட்டுத் தைரியத்தோடு,

''இன்ஸ்பெக்டர்! நீங்க நினைக்கிற மாதிரி நான் ஆலனைக் கொலை செய்யலை. அவன் கூடப் பழகினது உண்மை. அவன் கஞ்சா வாங்குறதுக்காக என்கிட்டே காசு கேட்டான். அப்போத்தான் சுமதி என்னைப் போட்டோ எடுத்திருக்கா.''

''ஃஸிட்?''- இன்ஸ்பெக்டர் சின்னதாய் சிரித்து டீபாயின் மேலிருந்த அந்த ஆஷ்ட்ரேயை எடுத்தார்.

''மோகன கிருஷ்ணன்... இது வெறும் ஆஷ்ட்ரே இல்லை... உள்ளே அமெரிக்கன் மேக் நாஸா மைக்ரோ டேப் ரிக்கார்டர் துல்லியமா இயங்கிட்டிருக்கு. நான் கங்காதரனைப் பார்க்க மாடிக்குப் போனதுக்குக் காரணம் இருக்கு. நான் மாடிக்குப் போனதும் நீங்க ரெண்டு பேரும் நிச்சயமா ஏதாவது பேசியிருப்பீங்க... போட்டுப் பார்த்துடலாமா?''

மிச்சம் மீதி இல்லாமல் நொறுங்கினார்கள் பாகீரதியும், மோகன கிருஷ்ணனும்,

டேப் சுழன்றது. மோகன கிருஷ்ணனும்,

பாகீரதியும் மறுபடியும் பேசினார்கள்.

''மோகன கிருஷ்ணன், உங்க மதரை கைத்தாங்கலா அழைச்சுக்கிட்டு ஜீப்புக்குப் போறீங்களா?''

பாகீரதியும் மோகன கிருஷ்ணனும் எழுந்தார்கள்.

''சித்தி.'' - கங்காதரன் கம்மிப்போன குரலில் கூப்பிட்டான்.

'' 'நான் அம்மா இல்லே... சித்திதான்டா'ன்னு உங்க சுய ரூபத்தைக் காட்டிட்டீங்க! ஜீப்புல ஏறுறதுக்கு முன்னாடி இன்னொரு அதிர்ச்சியான நியூஸையும் உங்களுக்குச் சொல்லிடறேன். டாக்டர் பவித்ரன்... உங்களுக்கு வேணும்னா குடும்ப டாக்டரா இருக்கலாம்... ஆனா அவர் என்னோட பெஸ்ட் ப்ரண்ட்... அவர் எனக்குப் போட்ட இஞ்சக்ஷன்ல வைரஸ் இல்ல சித்தி... சலைன் கலந்த க்ளூகோஸ் வாட்டர்...''

எல்லோரும் போன பிறகு-

தனியாய் சோபாவில் உட்கார்ந்திருந்த கங்காதரன் - வெரோனிகாவுக்காகப் புதிதாக அழ ஆரம்பித்திருந்தான்.

முற்றும்.



## வாசகர் கடிதம்



ஐம்பது பைசாவின் பெறுமதியை வரதராஜன் மூலம் எங்களுக்கு ஃபேக்ஸ் பண்ணிச் சொன்ன ஆர்.கே. சாருக்கு ஒரு நன்றி.

-முகம்மது அஜித், காயல்பட்டணம்.

ராஜேஷ்குமார் சாரின் நாவலொன்று 'அகராதி' என்ற பெயரில் திரைப்பட மாகும் செய்தியை எடிட்டர் ஏரியா வில் படித்து அளவில்லா ஆனந்தம் கொண்டோம். ஆசிரியரைப் போலவே நாங்களும் 'அகராதி' வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

பி.கு: 'போஸ்டரின் தமிழ் பெயர் சுவரொட்டி' என்று அகராதி எழுதிய ஜீயேவின் நகைச்சுவை வரிகளைப் படித்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தோம்.

-இ.இளமாறன், சேலையூர்.

அறிவார்ந்த கேள்விகள் - ஆழமான, விளக்கமான பதில்கள்! 'விளக்கம் ப்ளீஸ் விவேக்' பகுதிக்கு நிகரான ஒரு கேள்வி பதில் பகுதியை எந்த வார, மாத இதழிலும் காண முடியாது. எழுதுகின்ற ஆர்.கே. சாருக்கும், வழங்கு கின்ற ஜீயே சாருக்கும் அநேக நன்றிகள்.

-எஸ்.சிவராஜ், வேலூர்.

'நீ எங்கே என் அன்பே?' தலைப்பைப் போலவே நாவலும் நெஞ்சத்தை உருக்கியது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் இடம் பெற்றிருந்த கவிதை மனதை வருடியது. பாராட்டுக்கள்.

-தா.மலர்விழி, திருவல்லிக்கேணி.

'நீ எங்கே என் அன்பே?' நாவலை அடுத்தடுத்த நிகழ்வுகளை யூகிக்க முடியாத அளவிற்கு யதார்த்த மான சஸ்பென்சுடன் நகர்த்தி இருந்தார். நாவலின் இறுதியில் சரண் போலீஸ் அதிகாரி என்றும், கௌரிசங்கர்தான் குற்றவாளி என்றும் நாவலை முடித்தது ஆர்.கே.சாரின் வழக்கமான சஸ்பென்ஸ் டச்.

-அ.மேகநாதன், தொண்டியக்காடு.